வேளாண்மைத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

மானியக் கோரிக்கை எண்.5 – வேளாண்மை

## 2015–2016

**திரு ஆர். வைத்திலிங்கம்**
**வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும்**
**வேளாண்மைத்துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2015

**கொள்கை விளக்கக் குறிப்பு 2015–16**

**பொருளடக்கம்**


| பொருள் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | 1 |
| 1. வேளாண்மை | 4 |
| 2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் | 37 |
| 3. வேளாண்மைப் பொறியியல் | 54 |
| 4. வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க கல்வி | 66 |
| 5. விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று | 84 |
| 6.வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் | 90 |
| 7. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை | 104 |

## முன்னுரை

“உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து”

**(திருக்குறள் :1032)**

வறுமையை அகற்றி, கிராமப்புற வளர்ச்சியை ஏற்படுத்தும் முக்கிய பிரிவாக வேளாண்மை விளங்குகிறது. நாட்டின் மிக வலிமையான பிரிவாக விளங்கும் வேளாண்மை, பொருளாதார முன்னேற்றத்திற்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் பெரிதும் உறுதுணையாக திகழ்கிறது.

தமிழகத்தில் **இரண்டாம் பசுமைப் புரட்சியை** ஏற்படுத்த உறுதி பூண்டுள்ள அரசு, பல்வேறு கொள்கைகளை வகுத்ததோடு மண்வள மேலாண்மை, திறன்மிகு நீர் பயன்பாடு, தரமான இடுபொருட்கள் விநியோகம், பண்ணை இயந்திரமயமாக்குதல், உட்கட்டமைப்பு மேம்பாடு, விரிவாக்க முறைக்கு புத்துயிரூட்டுதல், தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கருவிகளை அதிகளவில் பயன்படுத்துதல் மற்றும் திறன் மேம்பாடு போன்ற உத்திகளை வகுத்துள்ளது.

அரசின் பல்வேறு நவீன அணுகுமுறைகளால் உணவுதானிய உற்பத்தியில், 2011–2012 ஆம் ஆண்டில் பெறப்பட்ட சாதனை அளவான 101.52 இலட்சம் மெ.டன்னைக் காட்டிலும், **2014–2015 ஆம் ஆண்டில் அதிகபட்ச அளவாக 127.95 இலட்சம் மெ.டன்** சாதனை அடையப்பட்டுள்ளது. இம்மாநிலம் மத்திய அரசின் “**கிரிஷி கர்மான் விருதை**”, அதிக உணவு தானிய உற்பத்திக்காக ஒரு முறையும், பயறு வகை உற்பத்திக்காக ஒரு முறையும் கடந்த மூன்று வருடங்களில் **இருமுறை** பெற்றுள்ளது. பல்வேறு புதிய உத்திகளை தமிழக அரசு மேற்கொண்டதற்காக “அக்ரிகல்சர் டுடே” என்னும் முன்னணி பத்திரிக்கை 2013–ஆம்

ஆண்டிற்கான "**மாநில வேளாண்மை தலைமை விருதை**" வழங்கியது. மேலும் "**இந்தியா டுடே**" என்னும் புகழ் பெற்ற பத்திரிக்கை "**வேளாண்மையில் சிறந்த பெரிய மாநிலத்திற்கான விருதையும்**" வழங்கியது. 2013–2014ஆம் ஆண்டிற்கான **சிறந்த மின் ஆளுமைக்கான தேசிய தங்க விருதையும்** மத்திய அரசிடமிருந்து இம்மாநிலம் பெற்றுள்ளது.

**தமிழக வேளாண்மை – ஒரு கண்ணோட்டம்**

நம் நாட்டில் பதினோராவது பெரிய மாநிலமான தமிழ்நாடு, மக்கள் தொகையில் ஏழாவது இடத்தில் (6%) உள்ளது. தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பான 130.33 இல.எக்டர் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 4 சதவீதமாகும். சமீபத்திய புள்ளியியல் அறிக்கையின்படி (2013–2014), மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில், மொத்த சாகுபடி பரப்பு 58.97 இல.எக்டர் மற்றும் நிகர சாகுபடி பரப்பு 47.14 இல.எக்டர் (36%) ஆகும். நாட்டின் நீர் ஆதாரங்களில் 3 சதவீதத்தை மட்டுமே பெற்றுள்ள இம்மாநிலத்தின் மொத்த பாசனப் பரப்பளவு 33.11 இல.எக்டர் ஆகும்.

நம் மாநிலம் சராசரியாக ஆண்டுக்கு சுமார் 921 மி.மீட்டர் மழை பெறுகிறது. இதில் வடகிழக்கு பருவமழை, தென்மேற்கு பருவமழை, கோடை மற்றும் குளிர் காலங்களில் முறையே 48%, 35%, 14% மற்றும் 3% மழை பெறப்படுகிறது. மாநிலத்தில் தனி நபருக்கு கிடைக்கும் ஆண்டு சராசரி நீர் அளவு அகில இந்திய அளவான 2200 கன மீட்டரை ஒப்பிடுகையில் 750 கன மீட்டர் ஆகவே உள்ளது.

தமிழகத்தில் நிலவுடைமைதாரர்களின் மொத்த எண்ணிக்கை 81.18 இலட்சமாகும். இவர்கள் வைத்திருக்கும் நிலப்பரப்பு 64.88 இலட்சம் எக்டராகும். இதில் சிறு மற்றும் குறு



விவசாயிகள் 92% ஆகவும், இவர்கள் வைத்திருக்கும் நிலப்பரப்பு 61% ஆகவும் உள்ளது. அகில இந்திய அளவில் சிறு மற்றும் குறு விவசாயிகள் 85% ஆகவும் அவர்கள் வைத்திருக்கும் நிலப்பரப்பு, 44.58% ஆகவும் உள்ளது. தனிநபர் வைத்திருக்கும் சராசரி நிலப்பரப்பு, தமிழகத்தில் 0.80 எக்டராகவும், அகில இந்திய அளவில் 1.15 எக்டராகவும் உள்ளது.

# 1. வேளாண்மை

## 1. முன்னுரை

மழையளவு, மண்ணின் தன்மை, பாசன வசதி மற்றும் பயிர் சாகுபடி முறையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் ஏழு வேளாண் தட்ப வெப்ப மண்டலங்கள் உள்ளன.

மாநிலத்தில், 17.75 இல.எக்டரில் (31%) நெற்பயிரும், 6.99 இல.எக்டரில் (12%) சிறு தானியங்களும், 6.34 இல.எக்டரில் (11%) பயறு வகைகளும், 4.38 இல.எக்டரில் (8%) எண்ணெய்வித்துக்களும், 3.24 இல.எக்டரில் (6%) கரும்பு பயிரும், 1.29 இல.எக்டரில் (2%) பருத்தியும், 4.29 இல.எக்டரில் (8%) தென்னையும், 12.22 இல.எக்டரில் (22%) தோட்டக்கலைப் பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன.

2013–2014ஆம் ஆண்டில், மத்திய அரசின் புள்ளியியல் அறிக்கையின்படி, உற்பத்தித்திறனில் **தேசிய அளவில்** தமிழ்நாடு **மக்காசோளம், நிலக்கடலை மற்றும் மொத்த எண்ணெய் வித்து பயிர்களில் முதலிடமும், கரும்பு பயிரில் இரண்டாமிடமும், அரிசி மற்றும் சூரியகாந்தி பயிர்களில் மூன்றாமிடமும்** அடைந்துள்ளது.

பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டக்காலத்தின் (2012–2017) இறுதி ஆண்டில், உணவு தானியங்களில் 170 இலட்சம் மெ.டன், பருத்தியில் 5 இலட்சம் பொதிகள், கரும்பில் 545 இலட்சம் மெ.டன் மற்றும் எண்ணெய் வித்துக்களில் 17 இலட்சம் மெ.டன் உற்பத்தி அடைவதே வேளாண் துறையின் நோக்கமாகும். வேளாண் உற்பத்தி திறனை உயர்த்தும் நோக்கில் பயிருக்கு உகந்த உத்திகளை



மேற்கொண்டு, உற்பத்தியை அதிகரிக்க இத்துறை தொடர்ந்து முயற்சித்து வருகிறது.

## 2. பருவநிலை

### 2.1 மழையளவு

மாநிலத்தில் 2014ஆம் ஆண்டில், கோடை காலத்தில் அதிக மழையும், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ காலங்களில் இயல்பான மழையும், குளிர் காலத்தில் குறைவான மழையும் பெறப்பட்டது. 2013–ஆம் ஆண்டை ஒப்பிடுகையில், குளிர் மற்றும் தென்மேற்கு பருவங்களில் பெறப்பட்ட குறைவான மழை காரணமாக 2014 காரீப் பருவத்தில் பயிர் சாகுபடி பரப்பளவில் குறைவு ஏற்பட்டது.

### 2.2 பயிர் நிலை

### 2.2.1. குறுவை நெல் சாகுபடி – 2014–2015

பாசனத்திற்காக மேட்டூர் அணை, 2014 ஆகஸ்ட் 10ம் தேதி அன்றுதான் திறக்க முடிந்தது. இந்நிலையில் டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், **ரூ.32.95 கோடி** நிதி ஒதுக்கீட்டில் **அறிவிக்கப்பட்ட குறுவை சாகுபடிக்கான சிறப்புத் திட்டம் மூலம் 4,08,822 விவசாயிகள் பயன்பெற்றனர்.** இந்த அறிவிப்பில் **12 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கியதோடு,** உற்பத்தி திறன் அதிகரிக்கும் இடுபொருட்களை மானியத்தில் விநியோகித்தல், சமுதாய நாற்றங்கால் அமைத்து 100 சதவீத மானியத்தில் விநியோகித்தல் போன்ற இனங்கள் இந்த அறிவிப்பில் இடம் பெற்றன. மேலும் ரூ.1399 இலட்சம் செலவில் 6993 அலகுகள் 'அடர்திறன் கொண்ட குழாய்கள்' டெல்டா மாவட்டங்களில் உள்ள 6993 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. இவற்றுடன்

ரூ.440.60 இலட்சம் செலவில் விலையில்லா 200 நெல் நடவு இயந்திரங்களும், 200 நெற்பயிருக்கான விசை களை எடுக்கும் கருவிகளும் டெல்டா மாவட்ட விவசாயக் குழுக்களுக்கு வழங்கப்பட்டன. இதனால் வடிமுனைக் குழாய் பாசனப் பகுதிகளில் இயல்பு பரப்பான **ஒரு இலட்சம் ஏக்கருக்குப்** பதிலாக **2.56 இல.ஏக்கரில் நெற்பயிர் சாகுபடி** மேற்கொள்ளப்பட்டது.

## 3. பயிர் சாகுபடி பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன்

2014–2015 ஆம் ஆண்டில், பல்வேறு திட்டங்கள் மற்றும் புதிய உத்திகளை செயல்படுத்தியதன் விளைவாக, மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகமாக அடையப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2013–2014 ஆம் ஆண்டினை ஒப்பிடுகையில், 2014–2015 ஆம் ஆண்டில் பல்வேறு பயிர்களில் எதிர்பார்க்கப்படும் சாகுபடி பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் பின்வருமாறு:

| பயிர் | பரப்பு (இல.எக்டர்) | | உற்பத்தி (இல.மெ.டன்) | | உற்பத்தி திறன் (கிலோ/எக்டர்) | |
|---|---|---|---|---|---|---|
| | 2013–14 | 2014-15* | 2013-14 | 2014-15* | 2013-14 | 2014-15* |
| அரிசி | 17.26 | 18.30 | 71.15 | 79.14 | 4122 | 4325 |
| சிறுதானியங்கள் | 9.33 | 9.71 | 32.73 | 41.58 | 3508 | 4289 |
| பயறு வகைகள் | 8.16 | 9.40 | 6.14 | 7.24 | 752 | 769 |
| **மொத்த உணவு தானியங்கள்** | 34.75 | 37.41 | 110.02 | 127.96 | | |
| எண்ணெய் வித்துக்கள் | 4.08 | 4.19 | 9.61 | 9.73 | 2355 | 2322 |
| பருத்தி (**) | 1.51 | 1.87 | 4.17 | 6.28 | 469 | 570 |
| கரும்பு (***) | 3.13 | 2.63 | 324.54 | 244.63 | 104 | 93 |
| **மொத்தம்** | 43.47 | 46.10 | | | | |

* **நான்காம் முன் மதிப்பீடு**

(**)உற்பத்தி (இல. பொதிகள்) ; (***)உற்பத்தி திறன் (மெ.டன்/ எக்டர்)



**2015–2016 ஆம் ஆண்டுக்கான பயிர் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தித் திட்டம்**

| பயிர் | பரப்பு (இல.எக்டர்) | உற்பத்தி (இல.மெ.டன்) | உற்பத்தி திறன் (கிலோ/எக்டர்) |
|---|---|---|---|
| அரிசி | 21.00 | 93.00 | 4429 |
| சிறுதானியங்கள் | 12.00 | 45.00 | 3750 |
| பயறு வகைகள் | 11.00 | 9.00 | 815 |
| **மொத்த உணவு தானியங்கள்** | 44.00 | 147.00 | |
| எண்ணெய் வித்துக்கள் | 5.62 | 13.85 | 2464 |
| பருத்தி (*) | 1.80 | 7.50 | 700 |
| கரும்பு (**) | 3.60 | 400.00 | 111 |
| **மொத்தம்** | 55.02 | | |

(*)உற்பத்தி (இல. பொதிகள்) ; (**)உற்பத்தி திறன் (மெ.டன்/ எக்டர்)

### 3.1 கரும்பு

தமிழ்நாட்டில் கரும்பு இரண்டாவது முக்கிய வேளாண் சார்ந்த தொழிற்பயிராகும். 3.50 இலட்சம் எக்டர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. இது மொத்த சாகுபடி பரப்பில் 5 சதவிகிதம் ஆகும். நமது மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தி இந்திய சர்க்கரை உற்பத்தியில் 7 – 9 சதவீதம் ஆகும். நுண்ணீர் பாசன பயன்பாடு, அகல பார்களில் நிழல்வலை நாற்று பண்ணையிலிருந்து கிடைக்கும் 25 முதல் 30 நாட்கள் வயதுடைய செதில்பரு நாற்று நடவு மற்றும் உரப்பாசனம் ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய தொழில்நுட்பமான நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டம் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில், நான்காம்

முன்மதிப்பீட்டின்படி 2.63 இலட்சம் எக்டரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு, 244.63 இலட்சம் டன்கள் கரும்பு உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உற்பத்தியாகும் கரும்பு, மாநிலத்தில் இயக்கத்தில் உள்ள 43 சர்க்கரை ஆலைகளால் அரைவை செய்யப்படுகிறது. இவற்றில் கூட்டுறவுத் துறையில் 16 சர்க்கரை ஆலைகளும், பொதுத்துறையில் 2 சர்க்கரை ஆலைகளும், தனியார் துறையில் 25 சர்க்கரை ஆலைகளும் உள்ளன.

கரும்பு விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு நியாயமான மற்றும் ஆதாய விலையை அறிவித்து வருகிறது. தமிழக அரசு, நியாயமான மற்றும் ஆதாய விலை மற்றும் மாநிலத்தின் கரும்பு சாகுபடி செலவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசு பரிந்துரை விலையை அறிவித்து வருகிறது. 2014–2015ஆம் அரைவைப் பருவத்திற்கு 9.5 சதவிகித சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்புக்கு, டன் ஒன்றுக்கு நியாயமான மற்றும் ஆதாய விலையாக ரூ.2200/- எனவும், அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு 0.1 சதவிகித கூடுதல் சர்க்கரைக் கட்டுமானத்திற்கு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.23.20 எனவும் மத்திய அரசு அறிவித்தது. இருப்பினும் தமிழக அரசு 2014–2015 ஆம் அரைவைப் பருவத்திற்கு, மாநில அரசின் பரிந்துரை விலையாக கரும்புக்கு டன் ஒன்றுக்கு போக்குவரத்துச் செலவினம் ரூ.100/– உட்பட, ரூ.2650/– என உயர்த்தி அறிவித்துள்ளது.



**4. இடுபொருட்கள்**

**4.1. விதைகள்**

வேளாண்மையில் விதை மிகவும் இன்றியமையாத இடுபொருளாகும். அனைத்து பயிர்களிலும் விதை தேவையை பூர்த்தி செய்வதற்காக வேளாண் துறை விதை உற்பத்தி திட்டத்தை வகுத்துள்ளது. தன் மகரந்த சேர்க்கை பயிர்களான நெல், கேழ்வரகு, பயறு வகைகள் மற்றும் நிலக்கடலை பயிர்களில் விதை மாற்று விகிதம் 33 சதவீதமும், அயல் மகரந்த சேர்க்கைப் பயிர்களான சோளம், கம்பு மற்றும் பருத்தி பயிர்களில் 50 சதவீதமும், வீரிய ஒட்டு இரகங்களில் 100 சதவீதமும் அடைவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஒரு ஆண்டுக்கு 29,600 மெ.டன் சுத்திகரிப்பு செய்யும் திறன் கொண்ட, 16 பெரிய, 2 நடுத்தர மற்றும் 63 சிறிய விதை சுத்திகரிப்பு நிலையங்களை அரசு அமைத்துள்ளது. நில மேம்பாடு, அறிவியல் சார்ந்த சாகுபடி முறைகளை மேற்கொள்ளுதல், நவீன சாகுபடி தொழில்நுட்ப உத்திகளை பயன்படுத்துதல், தேவையான பாசன வசதிகளை ஏற்படுத்துதல், பண்ணை இயந்திரமயமாக்குதலை ஊக்குவித்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொண்டு ஐந்து வருடங்களில் மாநில விதைப்பண்ணைகளை வலுப்படுத்தி தொழில்நுட்ப தகவல் மற்றும் செயல் விளக்க மையங்களாக மாற்ற துறை திட்டமிட்டுள்ளது.

2015–2016 ஆம் ஆண்டில், 34,650 மெ.டன் நெல், 5,085 மெ.டன் பயறு வகைகள், 6,000 மெ.டன் எண்ணெய் வித்துக்கள், 425 மெ.டன் சிறுதானியங்கள் மற்றும் 40 மெ.டன் பருத்தி சான்று விதை விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.2. பேரூட்டச் சத்துக்கள்

ஊட்டச்சத்து மேலாண்மை, நீடித்த நிலையான மண்வளப் பாதுகாப்பின் முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. நிலைத்த சுற்றுச் சூழலுக்கு உகந்த இரசாயன உரங்களை சமச்சீரான அளவில் உபயோகிப்பதை ஊக்கப்படுத்தவும் அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது. விவசாயிகளின் பண்ணைகளில் உற்பத்தி திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன், நிலவுடைமைகள், மண்வளம் குறித்த விபரங்கள், உகந்த பயிர் சாகுபடிமுறை, குறிப்பிட்ட பயிருக்கான உர பரிந்துரைகளை உள்ளடக்கிய கையேட்டினை அனைத்து விவசாயிகளுக்கும் அரசு வழங்கியுள்ளது.

பயிர் சாகுபடி முறையின் அடிப்படையில் வேளாண்மைத் துறை ஆண்டுதோறும் உரத் திட்டத்தினை வகுத்து, அதனடிப்படையில் மத்திய அரசின் உரத் துறையிலிருந்து உரங்களைப் பெற்று மாநிலத்தில் விநியோகம் செய்து வருகிறது. 2014–2015 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட உரங்கள் மற்றும் 2015–2016 ஆம் ஆண்டிற்கான உரத்தேவை விபரம் பின்வருமாறு:

(இல.மெ.டன்)

| உரம் | ஒதுக்கீடு 2014–2015 | விநியோகம் 2014–2015 | தேவை 2015–2016 |
|---|---|---|---|
| யூரியா | 10.50 | 9.77 | 9.80 |
| டி.ஏ.பி | 3.75 | 2.33 | 3.10 |
| பொட்டாஷ் | 4.00 | 2.88 | 4.30 |
| காம்ப்ளக்ஸ் | 6.50 | 4.87 | 6.40 |

விவசாயிகளுக்கு காலத்தே உரங்கள், குறிப்பாக யூரியா கிடைப்பதை உறுதி செய்ய தமிழக அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. உரங்களின் விலையைக்



குறைக்கும் முயற்சியாக, மாநிலத்தில் இரசாயன உரங்கள் மீதான 4 சதவீத மதிப்பு கூட்டு வரியிலிருந்து மாநில அரசு விலக்களித்துள்ளது. நாப்தா அடிப்படையிலான யூரியாவை மாநிலத்தில் தொடர்ந்து உற்பத்தி செய்யும் பொருட்டு, எம்.எப்.எல். மற்றும் ஸ்பிக் உர நிறுவனங்கள் கொள்முதல் செய்யும் நாப்தா மீதான 5 சதவீத மதிப்புக்கூட்டு வரியிலிருந்தும் விலக்களித்துள்ளது. போதுமான அளவு உரங்களை கொள்முதல் செய்து இருப்பு வைத்து, பயிர்சாகுபடி பருவங்களில் ஏற்படும் உரத் தட்டுப்பாட்டை தவிர்க்கவும், 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து அரசு ஆண்டுதோறும் டான்பெட் நிறுவனத்திற்கு வட்டியில்லா கடனாக ரூ.150 கோடி வழங்கி வருகிறது.

## 5. திட்டங்கள்

### 5.1. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களில் 4 சதவீத வளர்ச்சியை அடைவதே தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். இதுவரை இத்திட்டம் மத்திய அரசின் 100 சதவீத நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டது. 2015–2016 ஆம் ஆண்டு முதல், இத்திட்டம் 50:50 என்ற விகிதத்தில் மத்திய, மாநில அரசுகளின் நிதி பங்களிப்போடு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2014–2015 ஆம் ஆண்டில், நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள் மற்றும் துவரை சாகுபடியை ஊக்குவிக்கும் திட்டங்கள், நீடித்த நிலையான கரும்பு உற்பத்தி திட்டம், கரும்பு சோகை நிலப்போர்வை மூலம் மண் வளத்தை அதிகரித்தல், தென்னங்கன்றுகள் விநியோகம், உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்கு புதிய

கட்டிடங்கள் கட்டுதல், அங்கக உர ஆய்வுக்கான ஆய்வகங்கள் அமைத்தல், புதிய உயிர் உர உற்பத்தி மையங்கள் நிறுவுதல், வேளாண் விரிவாக்க மையங்கள் கட்டுதல், களப்பணியாளர்களுக்கு கையடக்கக் கணினிகள் வழங்குதல் போன்ற செயல்பாடுகள் ரூ.80.12 கோடியில் மேற்கொள்ளப்பட்டன.

2015–2016 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.155.09 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.2. தேசிய உணவு பாதுகாப்பு திட்டம்

நெல், பயறு வகைகள், சிறுதானியங்கள் மற்றும் வணிகப்பயிர்களின் உற்பத்தி, சாகுபடி பரப்பு விரிவாக்கம் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் தேசிய உணவு பாதுகாப்புத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2014–2015 வரை இத்திட்டம் மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டது. 2015–2016 ஆம் ஆண்டு முதல் 50:50 என்ற விகிதத்தில் மத்திய – மாநில அரசுகளின் நிதி பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.2.1. அரிசிக்கான தேசிய உணவு பாதுகாப்பு திட்டம்

அரிசிக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவண்ணாமலை மற்றும் கடலூர் ஆகிய 8 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. 2014–2015 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் பயிர் சாகுபடி முறை சார்ந்த செயல்விளக்கங்கள், தரமான சான்று விதைகள், பண்ணை இயந்திரங்கள் மற்றும் வேளாண் இடுபொருட்கள் விநியோகம் போன்ற செயல்பாடுகள் ரூ.25.04 கோடியில் செயல்படுத்தப்பட்டன.



2015–2016 ஆம் ஆண்டில், நேரடி நெல் விதைப்பு மற்றும் வரிசை நடவுக்கான செயல் விளக்கங்கள், உயர் விளைச்சல் நெல் இரக விதைகளுக்கான விநியோக மானியம் வழங்குதல் ஆகிய செயல்பாடுகள் ரூ.30.11 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 5.2.2 பயறு வகைகளுக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்

பயறு வகைகளுக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. 2014–2015 ஆம் ஆண்டில், ரூ.24.28 கோடியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

2015–2016 ஆம் ஆண்டில், துவரை, உளுந்து, பச்சைப் பயறு ஆகிய பயிர்களில் மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில் நுட்பங்களை விளக்கும் தொகுப்பு செயல்விளக்கங்கள், நிலக்கடலை மற்றும் பருத்தி பயிர்களில் ஊடுபயிர் செயல் விளக்கங்கள், பயிர் சாகுபடி முறை சார்ந்த செயல் விளக்கங்கள், உயர் விளைச்சல் இரகங்களின் சான்று விதை விநியோகம் போன்ற இனங்கள் ரூ.30.20 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 5.2.3. சிறுதானியங்களுக்கான தேசிய உணவு பாதுகாப்பு திட்டம்

சிறுதானியங்களுக்கான தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், திருப்பூர், திண்டுக்கல், தேனி மற்றும் தூத்துக்குடி ஆகிய 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. மேம்படுத்தப்பட்ட சாகுபடி முறைகளுக்கான செயல் விளக்கங்கள், உயர் விளைச்சல்

இரகங்களின் சான்று விதை விநியோகம் மற்றும் சிறிய வகை தெளிப்பு நீர் பாசன அமைப்புடன் கூடிய மழை நீர் அறுவடை செய்யும் அமைப்புகளை நிறுவுதல் ஆகிய செயல்பாடுகள் **2014–2015** ஆம் ஆண்டில் **ரூ.7.94** கோடியில் மேற்கொள்ளப்பட்டன.

**2015–2016** ஆம் ஆண்டில், மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த செயல் விளக்கங்கள், உயர் விளைச்சல் இரக மற்றும் வீரிய ஒட்டு இரக சான்று விதைகள் விநியோகம் போன்ற செயல்பாடுகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**5.2.4.வணிகப் பயிர்களுக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்**

2014–2015 ஆம் ஆண்டு முதல், **பருத்தி பயிர் சாகுபடி முறை சார்ந்த தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்** சேலம், தர்மபுரி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, தேனி, திண்டுக்கல், விழுப்புரம், பெரம்பலூர், தூத்துக்குடி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பருத்தி பயிருக்கான முன்னோடி செயல்விளக்கங்களும், பருத்தியில் பயறு வகை ஊடுபயிர் சாகுபடி மற்றும் அடர் நடவு முறை செயல் விளக்கங்களும் ரூ. **0.28** கோடியில் மேற்கொள்ளப்பட்டன.

**2015–2016** ஆம் ஆண்டில், இத்திட்டம் பெரம்பலூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ரூ.**0.56** கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2014–2015 ஆம் ஆண்டில், **கரும்பு பயிர் சாகுபடி முறை சார்ந்த தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்** கடலூர், விழுப்புரம், சேலம், நாமக்கல், ஈரோடு, அரியலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய



மாவட்டங்களில் ரூ. **0.31** கோடியில் செயல்படுத்தப்பட்டது. **2015–2016** ஆம் ஆண்டில், இத்திட்டம் திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் ரூ.**0.54** கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**5.3. நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்**

வேளாண் செயல்பாடுகளை இலாபகரமாக்கவும் வானிலை மாற்றத்துக்கு உகந்ததாக மாற்றவும், நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் **2014–2015** ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மானாவாரி பகுதிகளில் நீர்வள ஆதாரங்களை திறன்பட பயன்படுத்துவதோடு விரிவான மண்வள மேலாண்மை முறைகளையும் மேற்கொண்டு இயற்கை வள ஆதாரங்கள் பாதுகாப்பை இத்திட்டம் ஊக்கப்படுத்துகிறது. **2014–2015** ஆம் ஆண்டில், நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின் இனங்கள் ரூ.**16.23** கோடியில் மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டன.

**2015–2016** ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.**49.53** கோடி ஒதுக்கீட்டில், மத்திய, மாநில அரசுகளின் சரிவிகித நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**5.4 எண்ணெய்வித்துக்கள் மற்றும் எண்ணெய்ப்பனைக்கான தேசிய இயக்கம்**

எண்ணெய்வித்துக்கள், எண்ணெய்ப்பனை மற்றும் மரவகை எண்ணெய்வித்துக்களுக்கான மூன்று குறு இயக்கங்களை உள்ளடக்கியது **எண்ணெய்வித்துக்கள் மற்றும் எண்ணெய்ப்பனைக்கான தேசிய இயக்கம்.** இத்திட்டத்திற்காக மத்திய மற்றும் மாநில அரசுகள் **50:50** என்ற விகிதத்தில் நிதியை பகிர்ந்தளிக்கின்றன. குறைவான

உற்பத்தி திறன் கொண்ட தானியப் பயிர்களுக்கு மாற்றுப் பயிராக எண்ணெய்வித்து பயிர்களின் சாகுபடியை மேற்கொண்டு பரப்பளவை அதிகரிப்பதும், தரிசு நிலங்களில் எண்ணெய்ப்பனை மற்றும் மரவகை எண்ணெய்வித்து பயிர்களின் சாகுபடி பரப்பளவை விரிவுபடுத்துவதும் இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

2015–2016 ஆம் ஆண்டில், இத்திட்டம், மத்திய, மாநில அரசுகளின் சரிவிகித நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**5.4.1 எண்ணெய்வித்துக்களுக்கான குறு இயக்கம் –I**

நிலக்கடலை, சூரியகாந்தி, எள் மற்றும் ஆமணக்கு பயிர்களுக்காக குறு இயக்கம்–1 செயல்படுத்தப்படுகிறது. 2014–2015 ஆம் ஆண்டில், இத்திட்டம் கன்னியாகுமரி, சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் ரூ.9.80 கோடியில் செயல்படுத்தப்பட்டது. விதைகள், மேம்படுத்தப்பட்ட பண்ணைக்கருவிகள் மற்றும் நீர் சேமிக்கும் கருவிகள் விநியோகம், முன்னோடி செயல் விளக்கங்கள் அமைத்தல், புதிய தொழில்நுட்பங்கள் குறித்து அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கான பயிற்சி ஆகிய இனங்கள் செயல்படுத்தப்பட்டன.

2015–2016 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**5.4.2 எண்ணெய்ப்பனைக்கான குறு இயக்கம் –II**

நீர்வடிப் பகுதி மற்றும் தரிசு நிலங்களில் எண்ணெய்ப்பனை பரப்பளவை விரிவாக்கம் செய்வதே குறு இயக்கம்–II–ன் நோக்கமாகும். கடலூர், விழுப்புரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர்,



திருவாரூர், நாகப்பட்டினம், தேனி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2014–2015 ஆம் ஆண்டில், 398 எக்டர் பரப்பளவில் எண்ணெய்ப்பனை சாகுபடி விரிவுபடுத்தப்பட்டதோடு, ஏற்கனவே சாகுபடி செய்யப்பட்ட எண்ணெய்ப்பனைகளுக்கு பராமரிப்பு மானியமும் வழங்கப்பட்டது. எண்ணெய்ப்பனை வயல்களில் ஊடுபயிர் செய்ய நடவுப்பொருள் மானிய விலையில் வழங்கப்பட்டது. மேற்கூறிய அனைத்து செயல்பாடுகளும் மொத்தம் ரூ.1.62 கோடியில் மேற்கொள்ளப்பட்டன.

2015–2016 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.4.40 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**5.4.3 மரவகை எண்ணெய்வித்துப் பயிர்களுக்கான குறு இயக்கம் –III**

வேம்பு, புங்கம், இலுப்பை போன்ற மரவகை எண்ணெய்வித்துப் பயிர்கள் சாகுபடியை ஊக்குவிப்பதே இக்குறு இயக்கத்தின் நோக்கமாகும். இத்திட்டம் சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப் படுகிறது. 2014–2015 ஆம் ஆண்டில், ரூ.23 இலட்சத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

2015–2016 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**5.5 வேளாண் விரிவாக்கம் மற்றும் தொழில் நுட்பத்துக்கான தேசிய இயக்கம்**

2014–2015 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட வேளாண் விரிவாக்கம் மற்றும் தொழில் நுட்பத்துக்கான

தேசிய இயக்கத்தின் கீழ் வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கம், விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம், வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கம், பயிர் பாதுகாப்பு மற்றும் தாவர நோய் தடுப்புக்கான துணை இயக்கம் போன்ற **நான்கு வகையான துணை இயக்கங்கள்** செயல்படுத்தப்படுகின்றன. நிர்வாக கட்டமைப்பு மூலம் தொழில் நுட்ப தகவல் பரிமாற்றம் செய்து விரிவாக்க முறையை விவசாயிகள் சார்ந்ததாக மாற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கம், விதை மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம், வேளாண்துறை மூலமாகவும் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கம் வேளாண் பொறியியல் துறை மூலமாகவும் செயல்படுத்தப்படுகின்றன. பயிர் பாதுகாப்பு மற்றும் தாவர நோய் தடுப்புக்கான துணை இயக்கம் நேரடியாக மத்திய அரசின் வேளாண் துறையால் செயல்படுத்தப்படுகிறது.

### 5.5.1. வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கம் – மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணைக்கான விரிவாக்க சீரமைப்புத் திட்டம்

வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்படும் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணைக்கான விரிவாக்க சீரமைப்புத் திட்டம், மத்திய மாநில அரசுகளின் 50:50 என்ற நிதி பங்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, பட்டுப்பூச்சி வளர்ப்பு , மீன் வளர்ப்பு, வனத்துறை, வேளாண் பொறியியல், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று ஆகிய துறைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப்



பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவம் (ம) அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு மீன்வள பல்கலைக் கழகம் போன்ற பல்கலைக் கழகங்களின் ஒத்துழைப்புடன் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.இந்த இயக்கத்தின் கீழ், நவீன தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் பயிற்சி, செயல்விளக்கங்கள், கண்டுணர் சுற்றுலா, வயல் விழாக்கள் மற்றும் பண்ணைப் பள்ளிகள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2014–2015 ஆம் ஆண்டில், ரூ.40.96 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

2015–2016 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.59.40 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.5.2. விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம்

விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைக்கச் செய்வதே, விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கத்தின் நோக்கமாகும். இவ்வியக்கத்தின் கீழ், ஒரு ஏக்கருக்குத் தேவையான ஆதார / சான்றளிக்கப்பட்ட நெல், சிறுதானியங்கள், எண்ணெய்வித்துக்கள் மற்றும் பயறுவகை விதைகள் மானிய விலையில் விநியோகம் செய்யப்படுவதோடு விவசாயிகள் தமது விதைத் தேவையை தாமாகவே பூர்த்தி செய்ய விஞ்ஞான முறையில் தரமான விதை உற்பத்தி மேற்கொள்ள உரிய பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. 2014–2015 ஆம் ஆண்டிற்கான நிதி செலவினம் ரூ.17.25 கோடி ஆகும்.

இத்திட்டம் 2015–2016 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**5.5.3. தேசிய மின் ஆளுமை திட்டம் –வேளாண்மை**

மின் ஆளுமை உத்திகளாக இணையதள வசதிகள், தமிழ்நாடு வேளாண் தகவல் சேவை வலைதளம் (அக்ரிஸ்நெட்), **பண்ணை பயிர் மேலாண்மைத் திட்டம், அலைபேசி வாயிலாக விவசாயிகளின் புள்ளி விவரங்களை சேகரித்தல் மற்றும் விரிவான இடுபொருள் விநியோக மேலாண்மை தகவல் முறை மூலம் திட்ட பயன்களை கண்காணிக்கும் முறை** போன்றவை துறையால் உருவாக்கப்பட்டுள்ளன.

மின் ஆளுமைத் திட்டத்தின் அங்கமாக ரூ. 4.64 கோடி செலவில் அனைத்து விரிவாக்க களப்பணியாளர்களுக்கும் 3G இணைப்புடன் கூடிய 2,319 கையடக்கக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் வீடியோ படங்கள் மூலம் தொழில்நுட்பங்களை கிராமங்களில் பரவலாக்கம் செய்ய 174 சிறிய ஒளிஒலி சாதனங்கள் (Handheld Mini projectors) வழங்கப்பட்டதோடு அனைத்து வேளாண் தகவல்களையும் ஒரே இடத்தில் அளிக்கும் 125 தொடுதிரை கணினி மையங்கள் ரூ.1.26 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

2015–2016 ஆம் ஆண்டில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த இத்திட்டம் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**5.6.வேளாண் காப்பீட்டுத் திட்டங்கள்**

இயற்கை இடர்பாடுகளிலிருந்து விவசாயிகளை பாதுகாக்க, முக்கிய வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் பல்வேறு பயிர் காப்பீட்டுத் திட்டங்களின் கீழ் காப்பீடு செய்யப்படுகின்றன. பல்வேறு தருணங்களில்



செயல்படுத்தப்பட்ட பயிர் காப்பீடு திட்டங்களுக்கான காப்பீட்டு கட்டணம் மத்திய, மாநில அரசுகள் மற்றும் விவசாயிகளால் பகிர்ந்து கொள்ளப்பட்டது. பயிர் காப்பீட்டுத் திட்டங்களுள் ஒன்றான தேசிய வேளாண் காப்பீட்டுத்திட்டம் 2000–ஆம் ஆண்டு காரீப் பருவம் முதல் 2013 ஆம் ஆண்டு காரீப் பருவம் வரை செயல்படுத்தப்பட்டு, இத்திட்டம் 2013–2014 ஆம் ஆண்டு ராபி பருவத்தில் மாற்றி யமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டதால் விலக்கிக் கொள்ளப்பட்டது. எனினும் மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, 2014–2015 ஆம் ஆண்டு ராபி பருவம் முதல் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட்டது. மற்றொரு பயிர் காப்பீட்டுத் திட்டமான வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டுத் திட்டம் 2008–2009 ஆம் ஆண்டில், 8 மாவட்டங்களிலும், 2012–2013 ஆம் ஆண்டில் 11 மாவட்டங்களிலும், 2013 ஆம் ஆண்டு காரீப் பருவத்தில் 15 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2013–2014 ஆம் ஆண்டு ராபி பருவம் முதல் மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டதால் விலக்கிக் கொள்ளப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் 2010–2011 ஆம் ஆண்டு காரீப் பருவம் முதல் 2013 ஆம் ஆண்டு காரீப் பருவம் வரை முன்னோடி திட்டமாக கடலூர், நாமக்கல், சிவகங்கை ஆகிய மூன்று மாவட்டங்களிலும், 2013–2014 ஆம் ஆண்டு ராபி பருவம் முதல் 2014 ஆம் ஆண்டு காரீப் பருவம் வரை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டமும் 2014–2015 ஆம் ஆண்டு ராபி பருவம் முதல் விலக்கிக் கொள்ளப்பட்டது. தென்னை பயிர் காப்பீட்டுத் திட்டம் 2010–2011 ஆம் ஆண்டு

முதல் 11 மாவட்டங்களிலும், 2013–2014 ஆம் ஆண்டு முதல் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2014–2015 ஆம் ஆண்டில், பயிர் காப்பீட்டுத் திட்டங்களின் கீழ், இரு பருவங்களிலும் சேர்த்து ரூ.64.53 கோடி காப்பீடு கட்டண மானியமாக வழங்கப்பட்டு மொத்தம் 6.18 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 2015–2016 ஆம் ஆண்டில், 8.50 இலட்சம் விவசாயிகளை பதிவு செய்ய தமிழக அரசின் காப்பீட்டுக் கட்டண மானியமாக ரூ.30.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வசூலிக்கப்பட்ட பயிர் காப்பீட்டுக் கட்டணத் தொகையில், உணவுப் பயிர்கள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களுக்கு 100 சதவீதம் வரையும், ஆண்டு மற்றும் வணிகப் பயிர்களுக்கு 150 சதவீதம் வரையும் வேளாண் காப்பீட்டு கழகம் இழப்பீடு வழங்குகிறது. இழப்பீட்டுத் தொகையானது பெறப்பட்ட காப்பீட்டு கட்டணத் தொகையை விட அதிகமானால், அத்தொகை மத்திய மற்றும் மாநில அரசுகளால் சம விகிதத்தில் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. 2014–2015 ஆம் ஆண்டில் தமிழக அரசு பாதிக்கப்பட்ட 69,900 விவசாயிகளுக்கு பயிர் இழப்பீட்டுத் தொகையாக ரூ.71.17 கோடியினை வழங்கியுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டின் பயிர் இழப்பீட்டுத்தொகை, 2015–2016 ஆம் ஆண்டில், ரூ.444.48 கோடி (மத்திய அரசின் பங்கு : ரூ.196.84 கோடி, மாநில அரசின் பங்கு : ரூ.196.84 கோடி, இந்திய வேளாண் காப்பீட்டுக் கழகம் : ரூ.50.80 கோடி) பாதிக்கப்பட்ட 1,70,586 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2015–2016 ஆம் ஆண்டில் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



## 5.7.தென்னை வளர்ச்சி வாரிய நிதி உதவிபெறும் திட்டங்கள்

தென்னை சாகுபடி பரப்பளவை அதிகரித்து உற்பத்தியை அதிகரிக்கவும், தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகிக்கவும் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு தென்னை வளர்ச்சி வாரியம் நிதியுதவி வழங்கி வருகிறது. வேலூர் மாவட்டத்தில் உள்ள நவ்லாக் தென்னை நாற்றுப்பண்ணையில் தரமான 'நெட்டை x குட்டை' மற்றும் 'குட்டை x நெட்டை' தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. மண்டல தென்னை நாற்றுப்பண்ணைகளை வலுப்படுத்தவும் தென்னை வளர்ச்சி வாரியம் உதவுகிறது. தொழில்நுட்ப செயல்விளக்கத் திடல்கள் அமைப்பதற்கு மட்டும் தென்னை வளர்ச்சி வாரியத்தின் முழு நிதியுதவி பெறப்படுகிறது. மீதமுள்ள அனைத்து இனங்களும் மத்திய – மாநில அரசுகளின் 50 : 50 நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வருடமும் சுமார் 3.40 இலட்சம் தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

2015–2016 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 5.8. ஒருங்கிணைந்த மண்வள மேலாண்மை

மண்வள குறைபாடு, முறையற்ற இரசாயன உர பயன்பாட்டினால் மேலும் அதிகரித்து வருகிறது. மண்வள குறைபாட்டினை தடுப்பதற்காக, விரிவான நில அளவை, மண்மாதிரிகள் சேகரிப்பு மற்றும் ஆய்வு, விவசாயிகள்

ஒருங்கிணைந்த கையேடுகள் மூலம் மண்வகைக்கேற்ற ஊட்டச்சத்து மேலாண்மை, அமில மற்றும் களர் நிலங்களை சீர்திருத்துதல் போன்ற ஒருங்கிணைந்த மண்வள மேலாண்மை உத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 5.8.1. நில அளவை மற்றும் நிலப்பயன்பாட்டு அமைப்பு

உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளின்படி விரிவான நில அளவை மேற்கொண்டு, தமிழ்நாட்டின் மண்வள ஆதாரங்களின் விரிவான மற்றும் நம்பகமான விவரப்பட்டியல் தயாரிக்க கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் நில அளவை மற்றும் மண் பயன்பாட்டு அமைப்புகள் இயங்கி வருகின்றன.

### 5.8.2. ஒருங்கிணைந்த மண்வள மேலாண்மை உத்திகள்

மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த மண்வள மேலாண்மைக்கான உத்திகள் பின்வருமாறு:

- விவசாய நிலங்களின் மண்வளத்தை குறித்த தகவல்கள் அடங்கிய **விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடு** 67.45 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. "**மண்வள அட்டை இயக்கத்தின்" கீழ்** 2015–2016 ஆம் ஆண்டு முதல், மூன்றாண்டு காலத்தில் 81.18 இலட்சம் மண்வள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. 2015–2016 ஆம் ஆண்டில், 27.70 இலட்சம் மண்வள அட்டைகள் வழங்கப்படும்.
- வயல்களிலேயே மடக்கி உழுது மண்ணின் அங்ககச் சத்தை அதிகரிக்க ஆண்டுதோறும் 250 மெ.டன் **பசுந்தாள் உரவிதைகள்** கொள்முதல் செய்யப்பட்டு 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.



- மண்ணில் தழைச்சத்தை அதிகரிக்கவும், களைகளைக் குறைக்கவும், ஆண்டுதோறும் 525 மெ.டன் நீலப்பச்சைப்பாசி மற்றும் 500 மெ.டன் அசோலா உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.
- பண்ணைக் கழிவுகளிலிருந்து புளூரோட்டஸ் மூலம் மக்கு உரம் தயாரிப்பதற்கு ஒரு கிலோ புளூரோட்டஸ் மற்றும் 5 கிலோ யூரியா அடங்கிய 3500 தளைகள், ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளுக்கு விலையில்லா தளைகளாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.
- கரும்பு பயிர் கழிவுகள் மேலாண்மைக்காக, கரும்புத் சோகையை உரமாக்கும் திட்டம் 2014–2015 ஆம் ஆண்டில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 4,817 எக்டர் பரப்பளவில் ரூ.1.15 கோடியில் மேற்கொள்ளப்பட்டது. 2015–2016 ஆம் ஆண்டில், 20,000 எக்டர் பரப்பளவில் ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.9. விதைப் பெருக்குத் திட்டங்கள்

நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்தி பயிர்களின் தரமான சான்று விதைகள் பயிற்சி அளிக்கப்பட்ட விவசாயிகள் மூலம் ஒவ்வொரு ஆண்டும் விதைப் பெருக்கம் செய்யப்படுகின்றன. விதைகள் உற்பத்திக்காக விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. 2014–2015 ஆம் ஆண்டில் 16,181 மெ.டன் நெல் விதைகள், 308 மெ.டன் சிறுதானிய விதைகள், 3,638 மெ.டன் பயறு வகை விதைகள், 3,119 மெ.டன் எண்ணெய்வித்து விதைகள் மற்றும் 32 மெ.டன் பருத்தி

விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டன.

2015–2016 ஆம் ஆண்டு முதல் ரூ.25 கோடி சுழல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தரமான சான்று விதைகள் தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (TANSEDA) மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**5.10. பயிர் பாதுகாப்பு**

சுற்றுக் கணிப்பு முறை மூலம் பூச்சி நோய் தாக்குதல் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. பகுதி மற்றும் பயிருக்கேற்ற பூச்சி நோய் தாக்குதல் மற்றும் கட்டுப்பாடு பற்றிய அறிவுரைகள் குறுஞ்செய்திகள் மூலம் வழங்கப்படுவதோடு, குரல் வழிச் செய்திகள், வானொலி, தொலைக்காட்சி, துண்டு பிரசுரங்கள், முகாம்கள் மற்றும் செய்தித்தாள்கள் மூலம் பரவலாக்கம் செய்யப்படுகின்றன.

**5.10.1 ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை**

பயிர் பாதுகாப்புக்கான முழுமையான அணுகுமுறையாக ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை முறை மாநிலத்தில் பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது.

சுற்றுச் சூழலுக்கு உகந்த வேளாண்மையை செயல்படுத்தும் நோக்கில், வேளாண்மைத்துறை “ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மாதிரி கிராமங்களை” அமைத்துள்ளது. உயிரியல் சார்ந்த ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை உத்தியாக அதிக அளவில் பிரபலமாகி வரும் புதிய உத்தியான சுற்றுச்சூழல் பொறியியல் சார்ந்த பூச்சி மேலாண்மையில் தற்போது வேளாண்மைத் துறை தீவிர கவனம் செலுத்தி வருகிறது. சுற்றுச்சூழலை பாதுகாக்க பல்வேறு திட்டங்களான தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்,



எண்ணெய்வித்துக்கள் மற்றும் எண்ணெய்ப்பனைக்கான தேசிய இயக்கம், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் மற்றும் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் விவசாயிகளிடையே இந்த அணுகுமுறையை அரசு பிரபலப்படுத்தி வருகிறது. அரசின் இம்முயற்சியால், 1984–85ஆம் ஆண்டில் 10,926 மெ.டன்னாக இருந்த பூச்சிக் கொல்லி பயன்பாடு 2014–2015 ஆம் ஆண்டில் 2,096 மெ.டன்னாக குறைந்துள்ளது.

**5.11. தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம்**

ஐந்தாண்டுகளில் பருத்தி சாகுபடி பரப்பளவை 1.34 இலட்சம் எக்டரிலிருந்து 2.50 இலட்சம் எக்டராக அதிகரிக்கவும் எக்டருக்கு 493 கிலோ என்ற உற்பத்தி திறனை 870 கிலோ என்ற அளவிற்கு அதிகரிக்கவும் தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம் 2014–2015 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. 2014–2015 ஆம் ஆண்டில், 1.70 இலட்சம் எக்டர் சாகுபடி பரப்பளவு இலக்கிற்கு 1.87 இலட்சம் எக்டர் பரப்பளவில் பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2015–2016 ஆம் ஆண்டில், சென்னை, நீலகிரி, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, கரூர், புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் ரூ.40.68 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**5.12. தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டம்**

உலக வங்கியின் நிதி உதவியோடு பொதுப்பணித்துறையின் நீர்வள ஆதார அமைப்பின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல், வேளாண்

விற்பனை மற்றும் வேளாண் வணிகம், கால்நடை வளர்ப்பு, மீன்வளம் ஆகிய துறைகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து தெரிவு செய்யப்பட்ட 61 உப நீர்வடிப் பகுதிகளில் பாசனப்பரப்பளவு, பயிர் உற்பத்தித் திறன் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

2014–2015 ஆம் ஆண்டில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி, ஈரோடு, நீலகிரி மற்றும் சென்னை நீங்கலாக 24 மாவட்டங்களில் சிறுதானியங்கள் மற்றும் குறுதானியங்களின் சாகுபடி பரப்பளவை அதிகரிக்க 10,000 எக்டரில் செயல்விளக்கங்கள் அமைக்க மானியம் வழங்குதல், பாரம்பரிய சிறுதானியங்களை பயிர்செய்யும் குழுக்களுக்கு மதிப்புக்கூட்டு இயந்திரங்கள் வழங்குதல், விதை பெருக்கத்திற்காக மானியம் வழங்குதல் மற்றும் செய்தி, கல்வி (ம) தகவல் தொடர்பு செயல்பாடுகள் போன்ற இனங்கள் ரூ.6.32 கோடியில் மேற்கொள்ளப்பட்டது.

**5.13 பயிர் விளைச்சல் போட்டி**

சிறந்த வேளாண்மை சாகுபடி முறைகளை விவசாயிகள் கடைபிடிப்பதை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் பயிர்விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுபோன்ற விவசாயிகள் பங்குபெறும் போட்டிகள் மாவட்ட மற்றும் மாநில அளவில் இறவையில் நெல், மக்காச்சோளம், சோளம், கம்பு, நிலக்கடலை, துவரை, உளுந்து, பச்சைபயறு, பருத்தி மற்றும் கரும்பு பயிர்களிலும் மானாவாரியில் நிலக்கடலைப் பயிரிலும் நடத்தப்பட்டு வருகின்றன.



ஆண்டுதோறும் 88 மாவட்ட அளவிலான போட்டிகளும் 9 மாநில அளவிலான போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. மாநில அளவிலான போட்டிகளில் பங்குபெற நெல், நிலக்கடலை, கரும்பு மற்றும் பருத்தி பயிர்களுக்கு நுழைவுக் கட்டணம் ரூ.100/–ம், பிறப்பயிர்களுக்கு ரூ.50/–ம் ; மாவட்ட அளவிலான போட்டிகளுக்கு நெல், நிலக்கடலை, கரும்பு மற்றும் பருத்தி பயிர்களுக்கு ரூ. 50/–ம் பிற பயிர்களுக்கு ரூ.25/–ம் வசூலிக்கப்படுகிறது. மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறந்த மகசூல் பெறும் விவசாயிகளுக்கு கீழ்கண்டவாறு ரொக்கப்பரிசுகள் வழங்கப்படுகின்றன.

(ரூபாயில்)

| பயிர்கள் | மாநில அளவில் | | மாவட்ட அளவில் | |
|---|---|---|---|---|
| | முதல் இடம் | இரண்டாம் இடம் | முதல் இடம் | இரண்டாம் இடம் |
| நெல், நிலக்கடலை, பருத்தி மற்றும் கரும்பு | 25,000 | 15,000 | 15,000 | 10,000 |
| இதரபயிர்கள் | 15,000 | 10,000 | 10,000 | 5,000 |

மாநில அளவில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை மேற்கொண்டு அதிக மகசூல் பெறும் விவசாயிக்கு ரூ.5 இலட்சம் பரிசுத்தொகையும், ரூ.3,500/– மதிப்புள்ள பதக்கமும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களால் குடியரசு தின விழாவில் வழங்கப்படுகிறது. **2015–2016** ஆம் ஆண்டில் ரூ. 14.07 இலட்சத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

**6. சேவை மையங்கள்**

விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்ய மண் ஆய்வு கூடங்கள், உர ஆய்வகங்கள், விதை சுத்திகரிப்பு

நிலையங்கள், விதை சேமிப்புக் கிடங்குகள், அரசு விதை பண்ணைகள், உயிர் உர உற்பத்தி மையங்கள், உயிரியல் பூச்சிக் கொல்லி உற்பத்தி மையங்கள், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், ஒட்டுண்ணி உற்பத்தி மையங்கள், அங்கக உர பரிசோதனைஆய்வகங்கள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையங்கள், நுண்ணூட்ட உர உற்பத்தி மையம், உழவர் மையங்கள், உழவர் பயிற்சி நிலையம், நீர் மேலாண்மை பயிற்சி நிலையம், மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம் மற்றும் வேளாண் விரிவாக்க மையங்கள் போன்ற வசதிகளை துறை ஏற்படுத்தியுள்ளது.

### 6.1. தரக்கட்டுப்பாடு

அத்தியாவசியப் பொருள் சட்டம் 1955–ன் கீழ் இயற்றப்பட்ட உரக்கட்டுப்பாடு ஆணை, 1985 வேளாண்மைத் துறையால் மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது. விவசாயிகளுக்கு தரமான இடுபொருட்கள் குறிப்பாக உரங்களை உரக்கட்டுப்பாடு ஆணையில் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளை தீவிரமாக செயல்படுத்தி வழங்குவதில் துறை தீவிர கவனம் செலுத்தி வருகிறது. தரக்கட்டுப்பாடு ஆய்வாளர்களால் சேகரிக்கப்படும் மாதிரிகளை ஆய்வு செய்ய மாநிலத்தில் **14 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்** இயங்கி வருகின்றன.

2014–2015 ஆம் ஆண்டில் 17,500 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதில் 514 எண்கள் தரம் குறைந்தவை எனக் கண்டறியப்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உரக்கட்டுப்பாடு ஆணை, 1985–இல் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள அங்கக உரங்களான மண்புழு உரம், மக்கிய நகரக்கழிவு உரம் மற்றும் எண்ணெய் நீக்கப்பட்ட



பிண்ணாக்குகளை ஆய்வு செய்ய தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின்கீழ் ரூ.2.84 கோடி நிதி ஒதுக்கீட்டில் திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் இரண்டு புதிய **அங்கக உர ஆய்வகங்களை** தமிழக அரசு அமைத்து வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் அமைந்துள்ள **மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம்**, ஆய்வகப் பணியாளர்களுக்கு பயிற்சிகள் அளித்து ஆய்வு உபகரணங்களின் நம்பகத் தன்மையையும், ஆய்வு முடிவுகளின் துல்லியத்தையும் உறுதி செய்வதற்கு உதவுகிறது.

மேலும், ஆண்டுதோறும் 11.26 லட்சம் மண் மாதிரிகளை ஆய்வு செய்யும் திறன் கொண்ட 30 **மண் ஆய்வுக் கூடங்கள்** மற்றும் 16 **நடமாடும் மண் ஆய்வு கூடங்கள்** மாநிலத்தில் இயங்கி வருகின்றன. மண்ணில் உள்ள நுண்ணூட்டச்சத்துக்களை ஆய்வு செய்ய **அனைத்து மண் ஆய்வுக் கூடங்களுக்கும்** அணுக்கதிர் ஈர்ப்பு ஒளி அலைக்கற்றைமானிக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் தரமான பூச்சிக்கொல்லிகளை பாதுகாப்பாக பயன்படுத்துவதை உறுதி செய்ய அறிவிக்கை செய்யப்பட்ட 15 அரசு **பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள்** செயல்படுகின்றன. பூச்சிக்கொல்லி சட்டம் 1968 மற்றும் பூச்சிக்கொல்லி விதிகள் 1971 ஆகியவற்றுக்கு உட்பட்டு, 147 பூச்சிக்கொல்லி தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் 13,321 தனியார் விநியோக மையங்களிலிருந்து கண்காணிப்பு அதிகாரிகளால் சேகரிக்கப்பட்ட பூச்சிக்கொல்லி மாதிரிகளின் தரத்தை இந்த ஆய்வகங்கள் ஆய்வு செய்கின்றன. 2014–2015 ஆம் ஆண்டில், 21,850 மாதிரிகள் இந்த ஆய்வகங்களில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

**6.2. வேளாண் இடுபொருட்களுக்கான உற்பத்தி மையங்கள்**

விவசாயிகளின் வயல்களில் தரமான சான்று விதை உற்பத்தி மேற்கொள்ள தேவையான ஆதார விதைகளை உற்பத்தி செய்வதில் 41 மாநில **அரசு விதைப்பண்ணைகள்** முக்கிய பங்கு வகிக்கின்றன. விவசாயிகளிடையே நவீன தொழில்நுட்பங்களை பரவலாக்கும் மையங்களாகவும் இந்த விதைப் பண்ணைகள் விளங்குகின்றன. 2015–2016 ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளில், அனைத்து அரசு விதைப் பண்ணைகளையும் நவீனமயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பயிர் வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமான **நுண்ணூட்டச்சத்து** சமச்சீர் பயிர் ஊட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் ஆண்டுதோறும் 14 வகையான அறிவிக்கை செய்யப்பட்ட நுண்ணூட்டச்சத்துக் கலவைகள் உற்பத்தி செய்யும் 1,600 மெ.டன் உற்பத்தித்திறன் கொண்ட **அரசு நுண்ணூட்ட உரக்கலவை உற்பத்தி மையம்** துறையில் உள்ளது. நுண்ணூட்ட உரக்கலவை வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. 2014–2015 ஆம் ஆண்டில், 2,107 மெ.டன் நுண்ணூட்ட உரக்கலவை தயாரித்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

அசோஸ்பைரில்லம், ரைசோபியம் மற்றும் பாஸ்போபாக்டீரியா போன்ற மூன்று வகையான உயிர் உரங்கள் துறையின் **15 உயிர் உர உற்பத்தி மையங்கள்** மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. இம்மையங்கள் ஆண்டுக்கு 3,000 மெ.டன் உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை. 200 கிராம் உயிர்உர பொட்டலம் ஒன்று ரூ.6/– வீதம் விநியோகிக்கப்படுகிறது. ஆண்டுக்கு 2.5 இலட்சம் லிட்டர் **திரவ உயிர் உர உற்பத்தி** மேற்கொள்ள 2014–2015 ஆம் ஆண்டில், 5 உயிர்உர உற்பத்தி மையங்களில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 7 புதிய திரவ உயிர் உர உற்பத்தி மையங்கள் ரூ. 8.93 கோடி செலவில் நிறுவப்பட்டு வருகின்றன.

உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி செய்ய **10 உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் மற்றும் 2 ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை மையங்கள்** செயல்படுத்தப்படுகின்றன. இக்காரணிகள் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

கீழ்க்கண்ட உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

| உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் | உற்பத்தி மையங்கள் (எண்கள்) | கட்டுப்படுத்தப்படும் பூச்சிகள் மற்றும் நோய்கள் |
|---|---|---|
| டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் (முட்டை ஒட்டுண்ணி) | 19 | கரும்பு இடைக்கணு புழு |
| பெத்திலிட், பிரக்கோனிட் (புழு ஒட்டுண்ணிகள்), யூலோபிட் (கூட்டுப்புழு ஒட்டுண்ணி) | 12 | தென்னை கருந்தலைப் புழு |
| பச்சை நிற மஸ்கார்டின் பூஞ்சானம் (மெட்டாரைசியம்) | 2 | தென்னை காண்டாமிருக வண்டு |
| என்.பி.வி. (நியூக்ளியர் பாலி ஹெட்ரோசிஸ் வைரஸ்) | 12 | நிலக்கடலை சிவப்பு கம்பளிப்புழு, புரூடீனியா மற்றும் பருத்தி காய்ப்புழு |

| | | |
|---|---|---|
| உயிரியல் பூஞ்சாணக்கொல்லிகள் – சூடோமோனாஸ், ட்ரைகோடெர்மா விரிடி | 12 | பருத்தி, பயறுவகைகள் மற்றும் நெற்பயிரில் ஏற்படும் நோய்கள் |

### 6.3. வேளாண் தகவல் பரவலாக்க மையங்கள்

அரசு **22 உழவர் பயிற்சி நிலையங்கள்** மூலமாக ஆண்டுதோறும் சுமார் 28,820 விவசாயிகள், உழவர் விவாதக்குழு அமைப்பாளர்கள், பண்ணை மகளிர் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கு பண்ணை மேலாண்மை மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிகள் வழங்கி வருகிறது.

மதுரை மாவட்டம், விநாயகபுரத்தில் 1985 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் **நீர் மேலாண்மை பயிற்சி நிலையத்தின்** மூலம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 180 களப்பணியாளர்களுக்கும் 900 விவசாயிகளுக்கும் பாசன தொழில்நுட்பங்கள் மற்றும் பாசனத் திறன் குறித்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் 1975–ஆம் ஆண்டு நிறுவப்பட்ட **மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம்** வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கான பயிற்சிகளை வழங்கும் முக்கிய பயிற்சி நிலையமாகும். ஆண்டுதோறும் 1,100 வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் பயிற்சி பெறுகின்றனர். திட்டமிடுதல், மதிப்பீட்டாய்வு செய்தல் தொடர்பான ஆலோசனை சேவைகள் வழங்க மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலைய வளாகத்தில், 2012–2013 ஆம் ஆண்டில் **மாநில வேளாண்**



**மேலாண்மை மற்றும் விரிவாக்க பயிற்சி நிலையம் (SAMETI)** அமைக்கப்பட்டுள்ளது.

### 7. சிறப்புத் திட்டங்கள் – 2014–2015

உற்பத்தித்திறன் மற்றும் விவசாயிகள் வருமானத்தை அதிகரிக்க 2014–2015 ஆம் ஆண்டில் கீழ்கண்ட சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

- ❖ **12,500 ஏக்கர் தரிசு** நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வரும் முன்னோடித் திட்டம் விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில், 8,032 விவசாயிகள் பயனடையும் வகையில் செயல்படுத்தப்பட்டது.
- ❖ **உணவு தானிய இயக்கத்தால்** 2013–2014 ஆம் ஆண்டில் இதுவரை அடையப்பெறாத மிக அதிகமான உணவு தானிய உற்பத்தி பெறப்பட்டது. 2014–2015 ஆம் ஆண்டில் உணவு தானிய இயக்கம் ரூ.182.34 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.
- ❖ **திருந்திய நெல் சாகுபடி முறை** 13.65 இலட்சம் எக்டரில் கடைபிடிக்கப்பட்டதுடன் முழு கிராம அணுகுமுறையில் 3,000 கிராமங்களில் 2.61 இலட்சம் எக்டர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டது.
- ❖ **துவரை சாகுபடியை இயக்க அணுகுமுறையில்** ஊக்குவிக்க நடவு முறை துவரை சாகுபடி, துல்லிய பண்ணையம், வரப்பு மற்றும் புதர் துவரை சாகுபடி, விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள் உருவாக்குதல் போன்ற செயல்பாடுகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து **ரூ.55.152 கோடி** நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டது.
- ❖ விவசாயிகளை ஊக்குவித்து **துல்லிய பண்ணையம்** மற்றும் **நீடித்த நவீன கரும்பு உற்பத்தி திட்டம்**

ஒவ்வொன்றையும் **5,000** எக்டர் பரப்பளவில் கடைப்பிடிக்கச் செய்ய முறையே ரூ.**42.76** கோடி மற்றும் ரூ.**17.95** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- ❖ பல்வேறு பயிர்களில் தரமான சான்று விதைகளை காலத்தே விநியோகம் செய்வதை உறுதி செய்ய, தமிழ்நாடு **மாநில விதை மேம்பாட்டு முகமை** ரூ.**25.00** கோடி ஆரம்ப நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- ❖ **சுற்றுச்சூழலுக்கு உகந்த நீடித்த நிலையான வேளாண் செயல்பாடுகளை** பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் மாதிரி அங்ககக் கிராமங்கள், சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மாதிரி கிராமங்கள், **7** புதிய திரவ உயிர் உர உற்பத்தி மையங்கள் மற்றும் **2** அங்கக உர ஆய்வகங்கள் அமைத்தல் போன்ற செயல்பாடுகளுக்காக **ரூ. 22.47 கோடி நிதி ஒதுக்கீடு** செய்யப்பட்டது.
- ❖ வேளாண் களப்பணியாளர்கள் கிராமங்களுக்கு நிரந்தர பயணம் மேற்கொண்டு, விவசாயிகள், விவசாய குழுக்கள் மற்றும் விளைபொருள் குழுக்களை நேரடியாக சந்தித்து தொழில்நுட்ப பரிமாற்றம் செய்ய, “**விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறையின் கீழ் விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தரப்பயணத் திட்டம்**” **05.01.2015** அன்று துவக்கப்பட்டு **379** வட்டாரங்களில் வேளாண்மைத்துறை வாயிலாகவும், **6** வட்டாரங்களில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை வாயிலாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ❖ உலகக் குடும்ப பண்ணைய ஆண்டை சிறப்பிக்கும் வகையில், பண்ணை மகளிருக்கு முழு **அதிகாரம் வழங்கி குழு முறையிலான வேளாண் செயல்பாடுகளில்** ஈடுபடுத்த **770 பண்ணை மகளிர் குழுக்கள்** அமைக்கப்பட்டுள்ளன.



## 2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

### 1. முன்னுரை

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மைத் துறையிலிருந்து **26.09.1979** அன்று பிரிக்கப்பட்டது.

தமிழ்நாட்டின், வேளாண் தட்பவெப்ப நிலை பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், மலர்கள், நறுமணப் பயிர்கள், மலைத் தோட்டப் பயிர்கள் மற்றும் மூலிகை மற்றும் வாசனை திரவியப் பயிர்கள் ஆகியவற்றின் சாகுபடிக்கு ஏற்றதாக உள்ளது. தோட்டக்கலைப் பயிர்கள் **10** இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. இது மொத்த சாகுபடி பரப்பில் சுமார் **19** சதவீதம் ஆகும். தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களின் விபரம் கீழ்க்கண்டவாறு:

**(பரப்பு – இல. எக்டர், உற்பத்தி – இல. மெட்ரிக் டன், உற்பத்தித்திறன் – மெ.டன் / எக்டர்)**

| வ. எ | பயிர் | 2014–15 (துற்காலிகம்) | | | 2015–16 (மதிப்பீடு) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பரப்பு | உற்பத்தி | உற்பத்தித் திறன் | பரப்பு | உற்பத்தி | உற்பத்தித் திறன் |
| 1 | பழங்கள் | 2.86 | 59.63 | 20.85 | 2.94 | 62.61 | 21.30 |
| 2 | காய்கறிகள் | 2.85 | 75.16 | 26.37 | 2.93 | 78.92 | 26.94 |
| 3 | நறுமணப் பயிர்கள் | 1.13 | 7.82 | 6.92 | 1.16 | 8.21 | 7.08 |
| 4 | மலைப் பயிர்கள் | 6.85 | 12.83 | 1.87 | 7.06 | 13.48 | 1.91 |
| 5 | மூலிகை, வாசனை திரவியப் பயிர்கள் | 0.13 | 2.2 | 16.92 | 0.14 | 2.31 | 16.50 |
| 6 | மலர்கள் | 0.25 | 3.36 | 13.44 | 0.26 | 3.52 | 13.54 |
| மொத்தம் | | 14.07 | 161.00 | 11.44 | 14.49 | 169.05 | 11.67 |

தமிழகமானது, காய்கறிகள் உற்பத்தித்திறனில் முதல் இடத்தையும் (29.95 மெட்ரிக் டன்/எக்டர்), வாழை சாகுபடி பரப்பில் இரண்டாவது இடத்தையும் (1.18 இலட்சம் எக்டர்), வாழை உற்பத்தியில் முதல் இடத்தையும் (56.50 இலட்சம் மெ.டன்), மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி (49.76 இலட்சம் மெ.டன்) மற்றும் உற்பத்தித்திறனில் (41.25 மெ.டன்/எக்டர்) தேசிய அளவில் முதலிடத்தினை வகிக்கிறது.

விஞ்ஞானப்பூர்வமான மற்றும் உயர் தொழில்நுட்ப சாகுபடி முறைகளை ஊக்குவித்தல், மேம்பட்ட அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளை நவீனமயமாக்குதல் ஆகிய இலக்குகள் தோட்டக்கலைத்துறையின் கொள்கைகளாகும்.

தரமான நடவு செடிகள் விநியோகம், பிரபலமான வீரிய ஒட்டுரக விதைகளின் பயன்பாடு, உயர் தொழில்நுட்பங்களைக் கொண்டு தோட்டக்கலைப் பயிர்களில் விரிவாக்கம், அடர்நடவு சாகுபடி ஊக்குவிப்பு, பசுமைக்குடில் சாகுபடிக்கு மானியம், நுண்ணீர்ப்பாசன உபயோகம், ஒருங்கிணைந்த உரம், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, வீட்டுத்தோட்டம் மற்றும் மாடித் தோட்டங்களை ஊக்குவித்தல் ஆகிய சில திட்டங்கள் தோட்டக்கலைத்துறையில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களுள் அடங்கும்.

**2. தோட்டக்கலைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**i. தேசிய தோட்டக்கலை இயக்கம்**

இவ்வியக்கத்தில் ஒட்டுமொத்த தோட்டக்கலை வளர்ச்சியில் கவனம் செலுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் தோட்டக்கலைப் பயிர்களில் பரப்பு விரிவாக்கம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த தோட்டக்கலை முறைகளான



பாதுகாக்கப்பட்ட சாகுபடியைப் பின்பற்றுதல் மற்றும் நவீன அறுவடை பின்சார் மேலாண்மை ஆகியவற்றை மேற்கொள்ள விவசாயிகளுக்கு உதவி அளிக்கப்படுகிறது.

அரியலூார், கோயம்புத்தூார், கடலூார், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, பெரம்பலூார், புதுக்கோட்டை, திருப்பூர், இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், நீலகிரி, தேனி, திருநெல்வேலி, திருச்சி, வேலூார் மற்றும் விழுப்புரம் ஆகிய 22 மாவட்டங்களில் தேசிய தோட்டக்கலை இயக்கம் செயல்படுத்தப்படுகிறது.

2014–15ஆம் ஆண்டில், கூடுதலாக 12,922 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப் பட்டுள்ளது. தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம், 5 இலட்சம் சதுர மீட்டர் அளவிற்கு பாதுகாக்கப்பட்ட சூழல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இயற்கை வேளாண்மை முறை சாகுபடி 1,000 எக்டர் பரப்பளவிற்கு ஊக்குவிக்கப்பட்டுள்ளது. மேலும் சிப்பம் கட்டும் அறைகள், குளிர்சாதனக் கூடங்கள் அமைத்தல், பழம் பழுக்க வைக்கும் அறைகள், குறைந்த செலவிலான வெங்காய சேமிப்பு அறைகள் அமைத்தல் ஆகியவையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வியக்கத்தின் மூலம் மலைக் காய்கறிப்பயிர்கள் மற்றும் வெப்பமண்டல பழப்பயிர்களுக்கான மகத்துவ மையங்களும் முறையே நீலகிரி மற்றும் திருச்சி மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வருகிறது. 2014–15 ஆம் ஆண்டு, ரூ.65.13 கோடி நிதி ஒதுக்கீட்டில் இவ்வியக்கத்தின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் மத்திய, மாநில அரசுக்கு இடையே 85:15 நிதி பங்களிப்பில் செயல்படுத்தப்பட்டு வந்தது.

இத்திட்டம் 2015–16 ஆம் ஆண்டில் மத்திய, மாநில அரசுக்கு இடையே 50:50 என்ற சரிசம பங்களிப்புடன் ரூ.123 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**ii. நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின் பண்ணை நீர் நிர்வாகத் திட்டத்தின் கீழ் நுண்ணீர் பாசனம் :**

பயிர் சாகுபடிக்கு நீர் இன்றியமையாத இடுபொருளாக விளங்குகிறது. போதிய பாசன நீர் பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் அதிகரிப்பதை நிர்ணயம் செய்யும் முக்கிய காரணியாக விளங்குகிறது. நுண்ணீர் பாசன அமைப்புகளைப் பயன்படுத்துவதினால் நீர் பயன்பாட்டுத்திறன் 40 முதல் 60 சதவீதம் வரை அதிகரிக்கிறது.

நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் 2014 வழிகாட்டுதலின்படி, நுண்ணீர் பாசனத் திட்டத்திற்கு, விவசாயிகளுக்கு 25 முதல் 50 சதவீத மானியம் மட்டுமே மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், மாநில அரசால் நுண்ணீர் பாசனம் அமைப்பதற்கு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதமும் மானியமாக வழங்கப்படுகிறது. மத்திய அரசினால் வழங்கப்படும் மானியப் பங்குத்தொகைக்கு கூடுதலான தொகை மாநில அரசு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது. 2014–15ம் ஆண்டில், ரூ.119.76 கோடி நிதி ஒதுக்கீட்டில், 12,518 எக்டர் பரப்பளவில் நுண்ணீர் பாசன அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2015–16 ஆம் ஆண்டில், பிரதம மந்திரி விவசாய நீர் பாசனத் திட்டத்தின் (PMKSY) கீழ் ரூ.296.96 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.



**iii. தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம்**

ஒட்டு மொத்த வளர்ச்சி மூலம் வேளாண்மையில் 4 சதவீத வளர்ச்சி விகிதத்தை உறுதி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டம், ஒரு சிறப்புத் திட்டமாகும்.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக, துல்லிய பண்ணையத் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துதல், திசு வாழைக்கன்றுகளை உபயோகித்தல், வாழைத்தார் உறை பயன்பாட்டை ஊக்குவித்தல், பந்தல் மற்றும் கொடிப்பந்தல் காய்கறி சாகுபடியை ஊக்குவித்தல், தோட்டக்கலைப் பயிர்களில் பரப்பு விரிவாக்கம் மற்றும் மானிய விலையில் இயந்திரங்கள் வழங்குதல் போன்றவை ரூ.14.22 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2015–2016 ஆம் ஆண்டில் ரூ.21.69 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**iv. பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சித் திட்டம்**

நகரங்களின், காய்கறிகளின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இவற்றின் அருகில் உள்ள பகுதிகளில் காய்கறிகள் சாகுபடி ஊக்குவிக்கப்படுகிறது. பொது மற்றும் தனியார் தொழில்முனைவோர்களை சந்தை ஒருங்கிணைப்பாளர்களாக்கி, விவசாயிகளிடமிருந்து காய்கறிகள் சேகரிக்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்டு, தரம் பிரிக்கப்பட்டு, சிப்பமிடப்பட்டு நகர்ப்புறங்களில் அமைக்கப்பட்டுள்ள சில்லரை விற்பனை மையங்களுக்கு

அனுப்பப்படுகிறது. விவசாய குழுக்கள்/விவசாய கூட்டமைப்புகளை உருவாக்குதல், காய்கறி சேகரிப்பு மையங்களைக் கட்டுதல், நடமாடும் மற்றும் நிரந்தர காய்கறி விற்பனை மையங்களை ஏற்படுத்துதல் மற்றும் குளிர்சாதன அறைகளை நிறுவுதல் போன்றவை இத்திட்டத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன. 2014-15 ஆம் ஆண்டில், மதுரை மற்றும் சேலம் நகரங்களுக்கு அருகிலுள்ள பகுதிகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2015–16 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### v. மானாவாரி பகுதி மேம்பாடு

இத்திட்டம் நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின் ஒரு திட்டமாகும். தோட்டக்கலையில் நிலையான வளர்ச்சியை அடைய நீரை சிக்கனமாக பயன்படுத்தி, இடத்திற்கு ஏற்ற பண்ணைய முறையை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ், மானாவாரிப் பகுதியில் தோட்டக்கலை சார்ந்த பண்ணைய முறையை மேற்கொள்ள விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். மேலும் 50 சதவீத மானியத்தில் மண்புழு உர அலகுகளை குழு அடிப்படையில் அமைக்க விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். 2014–15 ஆம் ஆண்டில், தோட்டக்கலைப் பயிர்களில் மானாவாரிப் பகுதி மேம்பாடு ரூ.6.60 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2015–2016 ஆம் ஆண்டில் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.



### vi. தேசிய மருத்துவ பயிர்கள் இயக்கத் திட்டம்

மருத்துவப் பயிர்களைச் சார்ந்த நல்ல தரமான மூலப்பொருட்கள் தடையின்றி கிடைப்பதைப் பொறுத்தே ஆயுஷ் (ஆயுர்வேத நேச்சுரோபதி, யோகா, யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி) அமைப்பின் நிலையாண்மை அமைந்துள்ளது. மருத்துவப் பயிர்கள் பொதுவாக வனங்களில் காணப்படுகின்றன. நீண்டகால நிலையாண்மைக்கு வனத்திலிருந்து கிடைக்கும் மருத்துவப் பயிர்களை விவசாயிகளின் நிலங்களுக்கு மாற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ், மருந்து கூர்க்கன், கண்வலி கிழங்கு, அவுரி, வசம்பு, நித்திய கல்யாணி, நெல்லி, சோற்றுக் கற்றாழை, மணத்தக்காளி, வேம்பு, வால்மிளகு, துளசி போன்ற பல்வேறு மருத்துவ பயிர்களைச் சாகுபடி செய்வதற்கு சாகுபடி செலவினத்தில் 50 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது. 2014–15ஆம் ஆண்டில், ரூ.9.27 கோடி நிதியில், 3682 எக்டர் பரப்பளவில் மருத்துவ பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2015–16 ஆம் ஆண்டில் தேசிய ஆயுஷ் இயக்கம் –மருத்துவப் பயிர்கள் திட்டத்தின்கீழ் ரூ.1.44 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### vii. தேசிய மூங்கில் இயக்கம்

வீடு மற்றும் தொழிற்சாலைகளுக்கு தேவையான முக்கிய மூலப்பொருளாக மூங்கில் விளங்குவதால் விவசாய நிலங்களில் மூங்கில் சாகுபடி செய்வது அத்தியாவசியமாகிறது. தமிழ்நாட்டில், 1,679 எக்டர் பரப்பளவில் மூங்கில் பயிரிடப்பட்டு, ஆண்டுக்கு 30,222

மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. தேசிய மூங்கில் இயக்கத்தின் கீழ் மூங்கில் சாகுபடியை வனமில்லாத பகுதிகளில் சாகுபடி செய்ய ஊக்குவிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், சாகுபடி செலவினத்தில் 35 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. 2014–15ஆம் ஆண்டில், இத்திட்டத்தில் ரூ.66.77 இலட்சம் நிதியில், 310 எக்டர் பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டம் 2015–16 ஆம் ஆண்டில் ரூ.67 இலட்சம் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**viii. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்**

தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், தரமான நடவுச் செடிகள், உயர் விளைச்சல் இரக காய்கறிகள் மற்றும் மலர்களுக்கான விதைகள் 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. பழப்பயிர்கள் மற்றும் நறுமணப் பயிர்களுக்கு அதிகபட்சமாக 1 எக்டர் வரையிலும், காய்கறிகள் மற்றும் மலர்களுக்கு 0.5 எக்டர் வரையிலும் உயர் விளைச்சல் ரகங்களைக் கொண்டு சாகுபடி மேற்கொள்ள உதவி வழங்கப்பட்டுள்ளது. 2014–15ஆம் ஆண்டில் இத்திட்டம் 4,707 எக்டர் பரப்பளவில் காஞ்சிபுரம், திருவள்ளூர், கரூர், நாமக்கல், திருவாரூர், தூத்துக்குடி, நாகபட்டினம், திருவண்ணாமலை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ரூ.1.23 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டம் 2015–16 ஆம் ஆண்டில் ரூ.3.34 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.



**ix. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டது. தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பினை அதிகரிக்கும் நோக்குடன் காய்கறி விதைகள், தேயிலைக் கன்றுகள், ஆயில் என்ஜின்கள், கைத்தெளிப்பான்கள், விசை உழுவைகள் மற்றும் வேளாண் கருவிகள் போன்ற இடுபொருட்கள் குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் இத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2015–16 ஆம் ஆண்டில் ரூ.4.11 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**x. நகர தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் (நீங்களே செய்து பாருங்கள் தளை)**

நகர்ப்புற தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் (நீங்களே செய்து பாருங்கள் தளை) ரூ.5.00 கோடி ஒதுக்கீட்டில் 2013–14ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சென்னை மற்றும் கோயம்புத்தூர் நகரங்களில், வீட்டு மாடிகளில் காய்கறி வளர்ப்பை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் காய்கறி விதைகள், உயிரின பூச்சிக்கொல்லிகள், உயிர் உரங்கள் மற்றும் பயிர் வளர்ப்பதற்கான மண்ணில்லா ஊடகங்கள் அடங்கிய தளைகள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2015–16 ஆம் ஆண்டில் ரூ.5.37 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

xi. **கோகோ பரப்பு விரிவாக்கத் திட்டம்**

2014– 15 ஆம் ஆண்டில், முந்திரி மற்றும் கோகோ அபிவிருத்தி இயக்ககம் மற்றும் மாநில அரசின் பகிர்ந்தளிப்பு திட்டத்தின் கீழ் ரூ.1.89 கோடி செலவினத்தில், கோகோ பயிர் பரப்பு விரிவாக்கம் 1500 எக்டர் பரப்பளவில், செயல்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இத்திட்டம் கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, கொடைக்கானல், கிருஷ்ணகிரி, மதுரை, புதுக்கோட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், ஊட்டி, தேனி, திருப்பூர், திருச்சி, வேலூர், விழுப்புரம் மற்றும் நாமக்கல் ஆகிய 18 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டச் செலவினம், முந்திரி மற்றும் கோகோ அபிவிருத்தி இயக்கம் மற்றும் மாநில அரசின் 85:15 என்ற விகித பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டது.

**3. உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்**

2014–15 ஆம் ஆண்டில், தலா ரூ.10.00 இலட்சம் செலவினத்தில் திருச்சி மற்றும் ஈரோடு மாவட்ட தோட்டக்கலை விரிவாக்கம் மற்றும் பயிற்சி மையங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் ரூ.10.00 இலட்சம் செலவினத்தில் குடுமியான்மலையில் உள்ள மத்திய தோட்டக்கலை பயிற்சி மையத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**3.1. அரசு தோட்டக்கலைப்பண்ணைகள்**

துறையின் தோட்டக்கலைப் பண்ணைகள் நடவுச் செடிகளை உற்பத்தி செய்து நியாயமான விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கின்றன. மேலும், விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்களுக்கான செயல்விளக்க மையங்களாகவும் இப்பண்ணைகள் விளங்குகின்றன.



மாநிலத்தில் 22 மாவட்டங்களில், 56 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. ஆண்டுதோறும் 1.5 முதல் 2.0 கோடி பழவகைகளின் நடவு செடிகள் (மா, கொய்யா, நெல்லி, சப்போட்டா, மாதுளை, எலுமிச்சை, பீச், பிளம் மற்றும் இதர வகைகள்), மலைப்பயிர்களின் நடவுச்செடிகள் (பாக்கு, காப்பி, முந்திரி மற்றும் இதர வகைகள்), நறுமணப்பயிர்களின் நடவுச்செடிகள் (மிளகு, கிராம்பு, ஜாதிக்காய், கறிவேப்பிலை மற்றும் இதர வகைகள்), மலர் வகைச் செடிகள் (ரோஜா, மல்லிகை, சாமந்தி, விருட்சி மற்றும் இதர வகைகள்) மற்றும் குழித்தட்டுகளில் காய்கறி நாற்றுகள் இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

2014–15 ஆம் ஆண்டில், ரூ.16.57 கோடி செலவில் 203.59 இலட்சம் நடவு செடிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2015-16 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

**3.2. பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள்**

தோட்டக்கலைத் துறை, மாநிலத்தின் 5 மாவட்டங்களில் 10 பூங்காக்களைப் பராமரித்து வருகிறது. இவை உள்ளூர் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு பொழுதுபோக்கு மையங்களாகத் திகழ்கின்றன. மேலும் இவை தாவரவியல் மாணவர்களுக்கு பயிலும் களமாகவும் விளங்குகின்றது.

2014–15 ஆம் ஆண்டில், இராமநாதபுரம் மாவட்டம், அச்சடிபிரம்பு கிராமத்தில் ரூ.7.29 கோடி செலவில் பாரம்பரிய மரபணு பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட பூங்காக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

i. சென்னை, மாதவரத்தில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையில், 20.21 ஏக்கர் பரப்பளவில் ரூ.5.73 கோடி செலவினத்தில் ஒரு அலங்காரம் மற்றும் செயல்விளக்க பூங்கா.
ii. திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் அரசு தோட்டக்கலை பண்ணையில் 11.00 ஏக்கர் பரப்பளவில் ரூ.3.80 கோடி செலவினத்தில் ரோஜா தோட்டம் மற்றும் கொய்மலர் சாகுபடி செயல்விளக்க மையம்.
iii. கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரியில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையில் 15.00 ஏக்கர் பரப்பளவில் ரூ.4.00 கோடி நிதியில் சுற்றுச்சூழல் பூங்கா.

## 4. ஆண்டு மலர் மற்றும் பழக் கண்காட்சிகள்

ஆண்டுதோறும், வசந்த காலம் மற்றும் கோடைகாலப் பருவங்களில் பூங்காக்கள் மற்றும் தோட்டங்களில் பல்வேறு கண்காட்சிகள் நடைபெறுகின்றன. உதகமண்டலம், ஏற்காடு மற்றும் கொடைக்கானல் ஆகிய இடங்களில் உள்ள பூங்காக்கள் மற்றும் தோட்டங்களில் மலர் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. மலர் அலங்காரங்கள், இந்திய மற்றும் ஜப்பானிய மலர் அலங்காரங்கள், காய்கறிகளால் ஆன உருவங்கள், பூக்கோலங்கள் மற்றும் போன்சாய் ஆகியவை இக்கண்காட்சியின் முக்கிய கண்கவர் அம்சமாக விளங்குகின்றன.

குன்னூர் (உதகமண்டலம்), சிம்ஸ் பார்க்கில் பழக் கண்காட்சி, கிருஷ்ணகிரி மாம்பழக் கண்காட்சி, கோத்தகிரி (உதகமண்டலம்) காய்கறிகள் கண்காட்சி மற்றும் கூடலூர்



(உதகமண்டலம்) நறுமணப் பயிர்கள் கண்காட்சி ஆகியவை சுற்றுலா பயணிகளிடையே மிகவும் பிரசித்தி பெற்றுள்ளன.

உதகை ரோஜா தோட்டத்தில் நடத்தப்படும் ரோஜா மலர் கண்காட்சி இத்துறையினால் நடத்தப்படும் மற்றுமொரு முக்கிய நிகழ்ச்சியாகும். இக்கண்காட்சியில் பிரபலமான மற்றும் சுவாரசியமான (வசீகரிக்கும்) உருவ அமைப்புகள் பல்வேறு வண்ண ரோஜா மலர்கள் கொண்டு அமைக்கப்படுகின்றன. திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் அமைந்துள்ள சுற்றுச்சூழல் பூங்காவிலும் சாரல் விழா நடத்தப்படுகின்றது.

### 4.1. பன்னாட்டு தோட்டக்கலைக் கண்காட்சி 2014

பன்னாட்டு தோட்டக்கலை கண்காட்சி 2014, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தோட்டக்கலைத் துறை மற்றும் கொடிசியா ஆகியவை இணைந்து கோயம்புத்தூர், கொடிசியா தொழிற்காட்சி வளாகத்தில் “அனைத்தும் உள்ளடங்கிய வளர்ச்சிக்கான தோட்டக்கலை” என்ற கருப்பொருளில் 2014ஆம் ஆண்டு, நவம்பர் 7 முதல் 9 தேதி வரை நடத்தப்பட்டது. இக்கண்காட்சி இந்தியாவின் தோட்டக்கலை வளத்தை வெளிப்படுத்தியது. மேலும் இது, தோட்டக்கலைப் பயிர்களுக்கான நவீன உயர் தொழில்நுட்ப உத்திகளை காட்சிப்படுத்தியது.

தோட்டக்கலைக் கண்காட்சியின் ஒரு பகுதியாக, மாநிலத்தின் தோட்டக்கலை வளத்தை பிரதிபலிக்கும் வகையில், மலர்க்கண்காட்சி, பழக்கண்காட்சி, காய்கறிகள் கண்காட்சி, நறுமணம் மற்றும் மலைப் பயிர்கள் கண்காட்சி மற்றும் மூலிகைப் பயிர்கள் கண்காட்சி ஆகியவை தோட்டக்கலைத் துறையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பழப் பயிர்களில் அடர் நடவு சாகுபடி முறை, ஊட்டச்சத்து

தோட்டம் மற்றும் நிழல் வலைக் குடிலில் காய்கறிகள் சாகுபடி, நறுமணம் மற்றும் மலைப் பயிர்களில் பலஅடுக்கு சாகுபடி முறை, மலர்களில் துல்லிய பண்ணைய தொழில்நுட்பங்கள் ஆகியவை விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் செயல் விளக்க திடல்களாக அமைக்கப்பட்டிருந்தன.

**5. தோட்டக்கலை பயிற்சி மையங்கள்**

மாதவரம், குடுமியான்மலை, தளி மற்றும் உதகையில் தோட்டக்கலைப் பயிற்சி மையங்கள், துறை மூலம் நடத்தப்படுகின்றன. தோட்டக்கலையில் நவீன தொழில்நுட்பங்களில் விவசாயிகளின் அறிவுத்திறனை மேம்படுத்த இம்மையங்கள் பயிற்சி அளிக்கின்றன. உயர் அடர்நடவு முறை, பாதுகாக்கப்பட்ட சூழலில் சாகுபடி, அடர் நடவு சாகுபடியில் கிளை மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, ஒருங்கிணைந்த உர மேலாண்மை மற்றும் நுண்ணீர் பாசனம் ஆகியவை குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது. 2014–15 ஆம் ஆண்டில், இம்மையங்களில் 2500 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2015–16 ஆம் ஆண்டில் 3000 விவசாயிகளுக்கு ரூ.7.5 இலட்சம் நிதியில் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**6. நுண்ணீர் பாசன மாதிரி கிராமம்**

நுண்ணீர் பாசன முறைகளை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த நுண்ணீர் பாசன மாதிரி கிராமத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. சென்னை தவிர 31 மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு ஒரு கிராமம் வீதம் தேர்வு செய்யப்பட்டு அனைத்துப் பாசனப் பகுதிகளும் நுண்ணீர் பாசனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த மாதிரி கிராமம் சுற்றுப்புறப்பகுதி விவசாயிகளுக்கு செயல்விளக்கக்



கிராமமாக விளங்குகிறது. இத்திட்டம் இதுவரை 4331.96 எக்டேரில், 2659 விவசாயிகள் பயன்பெறும் வகையில் 31 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

நுண்ணீர் பாசனத் திட்ட செயலாக்கம் தகவல் தொழில்நுட்பங்களின் மூலம் மேலும் வலுப்படுத்தப்படுகிறது.

**இணையவழி கண்காணிப்பு**

நுண்ணீர் பாசனம் அமைக்க விண்ணப்பத்தினை பதிவு செய்தல் முதலாக வலைதளம் சார்ந்த இணையவழி கண்காணிப்பு தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையில் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ளது. மாவட்ட தொழில் நுட்பக் குழுவின் ஒப்புதல் வழங்குதல், பணி உத்தரவு வழங்குதல், பணி முழுமையுற்றதை சரிபார்த்தல், வட்டார அலுவலரின் அளவீட்டு சரிபார்ப்பு மற்றும் மானியம் விடுவித்தல் ஆகிய பணிகளும் இணையதளம் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொலை ஆளுமை மற்றும் மூன்றாம் நபர் ஆய்வினை தற்போதுள்ள இணையதள வழி கண்காணிப்பினை மேம்படுத்தி ஒருங்கிணைந்த மென்பொருள் தயாரிக்க, தேசிய தகவல் மையம் (NIC), சென்னை ஈடுபட்டுள்ளது. மேலும் கைப்பேசி சார்ந்த புவி வேலி (Geo fencing) கோட்பாடுகள் தோட்டக்கலைப் பயிர்களுக்கு அமைக்கப்பட்ட நுண்ணீர் பாசன அமைப்பை கண்காணிக்க பயன்படுத்தப்படவுள்ளது. வயலாய்வு செய்யப்பட்ட அனைத்து நிலப்பகுதியும், ஜிபிஎஸ் (GPS) உதவியுடன் புவிக்குறிப்பு வாயிலாக (அட்ச ரேகை மற்றும் தீர்க்க ரேகை) அடையாளம் காணப்படுகிறது.

**7. மகத்துவ மையங்களை உருவாக்குதல்**

தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ், இரண்டு மகத்துவ மையங்கள் இஸ்ரேல் தொழில்நுட்ப உதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரத்தில் காய்கறிப் பயிர்களுக்கான மகத்துவ மையமும், (ரூ.10.18 கோடி) மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் கொய்மலர்களுக்கான மகத்துவ மையமும் (ரூ.8.80 கோடி) இஸ்ரேல் அரசின் தொழில்நுட்ப உதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்றன. **மலைக்காய்கறிகளுக்கென** ஊட்டியிலும், வெப்பமண்டலப் பழங்களுக்கென திருச்சியிலும் என மேலும் இரண்டு மகத்துவ மையங்கள், ரூ.20.00 கோடி செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை (டான்ஹோடா)**

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையானது தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம் 1975ன் கீழ் பதிவு செய்யப்பட்டு மத்திய அரசு மற்றும் மாநில அரசின் கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு வகையான தோட்டக்கலை சார்ந்த திட்டங்களை செயல்படுத்தும் ஒரு “சிறப்பு நோக்க அமைப்பாக” 2004 ஆம் வருடம் முதல் செயல்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கம் (தேசிய தோட்டக்கலை இயக்கம் மற்றும் தேசிய மூங்கில் இயக்கம்), நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (பண்ணை நீர் நிர்வாக திட்டத்தின் கீழ் நுண்ணீர் பாசனம் மற்றும் மானாவாரி பகுதி மேம்பாடு), தேசிய மூலிகைப் பயிர் இயக்கம், அரசு தோட்டக்கலைப் பண்ணைகள், தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் ஆகிய முக்கிய திட்டங்கள் டான்ஹோடா மூலம் செயல்படுத்தப்படுகின்றன.



வேளாண்மை, தோட்டக்கலைத் துறை திட்டங்களுக்கான தரமான இடுபொருட்கள் மற்றும் நீரில் கரையும் உரங்கள் கொள்முதல் செய்து, விநியோகம் செய்ய சிறப்பு நோக்க அமைப்பாகவும் டான்ஹோடா செயல்படுகிறது. டான்ஹோடாவின் ஆளுமைக் குழு இந்த சிறப்பு நோக்க அமைப்பிற்கு அதிகாரக் குழுவாக செயல்படுகிறது. நீரில் கரையும் உரங்கள் மற்றும் விதைகள் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு உரிய தருணத்தில் வழங்க ரூபாய் ஐம்பது கோடி வட்டியில்லா சுழல் நிதியாக பயன்படுத்தப்படுகிறது.

**தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் வரையறுக்கப்பட்டது (டான்ஹோப்)**

தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம், சிறு மற்றும் குறு தோட்டக்கலை விவசாயிகளின் நலனுக்காக, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983ன் படி முதன்மை தோட்டக்கலை கூட்டுறவு நிறுவனமாக 1994ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தில் சந்தை தொடர்புடன் கூடிய தோட்டக்கலை நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துவதே முக்கிய நோக்கமாகும். இந்நிறுவனம் தமிழகம் முழுவதும் செயல்படுகிறது. இயக்குநர்கள் குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுபவர் இந்நிறுவனத்தின் தலைவராகவும், தோட்டக்கலை இணை இயக்குநர், மேலாண்மை இயக்குநராகவும் செயல்படுவர்.

# 3. வேளாண்மைப் பொறியியல்

## 1. முன்னுரை

வேளாண்மைப் பொறியியல் துறை கீழ்காணும் பணி தொடர்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

- நீர்ப்பிடிப்புப் பகுதிகளை மேம்படுத்துவதின் மூலம் மண் அரிமானத்தை தடுத்து மண் வளத்தைப் பாதுகாத்தல்;
- பாசன நீரை திறம்பட பயன்படுத்துதலை மேம்படுத்துதல்;
- பண்ணை இயந்திரமயமாக்குதலை தீவிரப்படுத்துதல்.

## 2.1. வேளாண்மை இயந்திரமயமாக்குதல்

வேளாண்மையில் பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்க இயந்திரமயமாக்குதல் மிக முக்கியத்துவம் வாய்ந்த உத்தியாகும். அரிய மற்றும் வேகமாக குறைந்து வரும் வளங்களை திறம்பட பயன்படுத்துவதில், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் இன்னும் அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

### 2.1.1. நிலமேம்பாட்டு இயந்திரங்கள் வாடகைக்கு வழங்குதல்

நிலம் சமன்படுத்துதல் மற்றும் வடிவமைத்தல் பணிக்கு இயந்திரங்கள் நியாயமான கட்டணத்தில் விவசாயிகளுக்கு துறை மூலம் வாடகைக்கு வழங்கப்படுகிறது. 91 மண் தள்ளும் இயந்திரங்கள், 63 நுண்ணிய நிலம் சமன்செய்யும் கருவிகள், 171 உழுவைகள், 2 ஹைட்ராலிக் மண் அள்ளும் இயந்திரங்கள், 7 நெல் நாற்று நடும் இயந்திரங்கள் மற்றும் 50 நெல் அறுவடை இயந்திரங்கள் போன்றவை விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு வழங்க இத்துறையில் பயன்பாட்டில் உள்ளன. இந்த இயந்திரங்கள் வெள்ளம் மற்றும் இயற்கைச் சீற்றங்களின் போது நிவாரணப்பணிகளுக்காகவும்



பயன்படுத்தப்படுகின்றன. இயந்திரங்களை வாடகைக்கு எடுக்க கைபேசி வாயிலாக இணையதளம் மூலம் பதிவு செய்யும் அமைப்பை இத்துறை உருவாக்கி வருகிறது.

### 2.1.2. சிறுபாசனத்திட்ட இயந்திரங்கள்

இத்துறையில் 30 சுழல்விசைத் துளைக்கருவிகள், 9 பெர்குஷன் துளைக்கருவிகள், 19 சிறு விசைத் துளைக்கருவிகள், 62 கைத்துளைக் கருவிகள், 7 நீள் துளைக் கருவிகள் மற்றும் 32 பாறை தகர்க்கும் கருவிகள் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வாடகைக்கு வழங்க பயன்பாட்டில் உள்ளன. புதிய ஆழ்துளை குழாய்க்கிணறுகள் அமைப்பதற்கும், திறந்த வெளி கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் இந்த இயந்திரங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. மேலும் நிலத்தடி நீர் இருப்பை கண்டுபிடித்திடும் பொருட்டு, 8 நிலத்தடி நீர் ஆய்வுக் கருவிகளும், 2 மின்னியல் ஆய்வுக் கருவிகளும் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

### 2.1.3. தேசிய வேளாண்மை வள ர்ச்சித் திட்டத்தின் கீழ் வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம்

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கரும்பு சாகுபடியில் விதைப்பு முதல் அறுவடைக்கு பின் மேலாண்மை வரையிலான பணிகளுக்கான இயந்திரங்களை பிரபலப்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு, தொழில் முனைவோர் மூலம் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கி வாடகைக்கு விடும் பொருட்டு 40 விழுக்காடு மானியமாக ரூ.2.77 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2014–15 ஆம் ஆண்டில் 7694 வேளாண் இயந்திரங்களும் கருவிகளும் விவசாயிகளுக்கு ரூ.30 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2015–16 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**2.1.4. மத்திய அரசின் வேளாண் இயந்திரமயமாக்கும் உப இயக்கத் திட்டத்தின் கீழ் வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் விவசாயிகள் டிராக்டர், பவர்டில்லர், நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம், தானியங்கி சிறப்பு இயந்திரம், தானியங்கி தோட்டக்கலை இயந்திரங்கள், டிராக்டர் (35 குதிரை சக்தி திறனுக்கும் குறைவான மற்றும் அதிகமான) மற்றும் பவர் டில்லரால் இயங்கும் பண்ணைக்கருவிகள், மனிதசக்தி மற்றும் கால்நடைகளால் இயக்கப்படும் கருவிகள், பயிர் பாதுகாப்புக் கருவிகள் போன்ற வேளாண் கருவிகளை வாங்குவதற்கு ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் சிறு, குறு, பெண் விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியமும் இதர விவசாயிகளுக்கு 40 விழுக்காடு மானியமும் வழங்கப்படுகிறது.

2014–15 ஆம் ஆண்டில் 222 டிராக்டர்கள் வாங்குவதற்கு ரூ.2.53 கோடி மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டம், குமுளூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் வேளாண்மை இயந்திரங்களுக்கான பரிசோதனைக்கூடத்தை அமைக்க ரூ.1.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள அனைத்து 385 வட்டாரங்களிலும் விதைப்பு, நடவு, களையெடுத்தல், பயிர்பாதுகாப்பு மற்றும் அறுவடை போன்ற வேளாண் உற்பத்தி பணிகளை குறித்த நேரத்தில் மேற்கொள்ள வசதியாக பதிவு செய்யப்பட்ட விவசாய குழுக்கள் மூலமாக வேளாண்மை இயந்திரங்களை



வாடகைக்கு விடும் மையங்களை அமைக்கும் திட்டத்தை மாநில அரசு அறிவித்துள்ளது. முதற்கட்டமாக மையத்திற்கு ரூ.25.00 இலட்சம் வீதம் 65 மையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 40 விழுக்காடு (ரூ.10.00 இலட்சம்) மானியமாகவும், மீதமுள்ள 60 விழுக்காடு (ரூ.15.00 இலட்சம்) வேளாண் குழுக்களின் பங்களிப்பாகும். இதற்காக ரூ.6.50 கோடி நிதி இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டாவது கட்டமாக ரூ.9.90 கோடி மதிப்பீட்டில் 99 வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அறுவடைக்குப்பின் செய் நேர்த்தி தொழில்நுட்பம் திட்டத்தில் 22 பல்வகை பயிர் கதிரடிக்கும் இயந்திரங்கள், 27 மக்காச்சோளம் பிரித்தெடுக்கும் இயந்திரங்கள் மற்றும் 32 எண்கள் பருப்பு உடைக்கும் சிறு இயந்திரங்கள் ரூ.134.39 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு, 327 எண்கள் செயல் விளக்கங்கள் ரூ.9.80 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறைந்தபட்சம் 12 மாதங்கள் செயல்விளக்கங்கள் செய்து காண்பித்த பிறகு இவ்வியந்திரங்கள் பயனாளிகள் குழுக்களுக்கு இயந்திரத்தின் விலையில் 50 விழுக்காடு தொகையில் வழங்கப்படும்.

இத்திட்டம் 2015–16 ஆம் ஆண்டில் ரூ.13.22 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**2.2.1. நதிப்பள்ளத்தாக்குகளில் மண்வளப் பாதுகாப்பு**

மண் அரிமானத்தை தடுப்பதுடன் நிலத்தின் தரம் குறைவதையும் தடுக்க மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பணிகளையும் இத்துறை செயல்படுத்தி வருகிறது. பல்நோக்கு

நீர்த்தேக்கங்களில் வண்டல்மண் படிவதைக் குறைக்கும் வகையில் மாநிலங்களுக்கிடையே உள்ள நதிப்பள்ளத்தாக்கு திட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு பணிகள் மத்திய அரசு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநிலத்தில் நதிப்பள்ளத்தாக்குத் திட்டமானது, தென்பெண்ணையாறு மற்றும் மேட்டூர் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2013–14 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2014–15ஆம் ஆண்டில், 12394 எக்டர் பரப்பில் மண்வள பாதுகாப்புப் பணிகளும், 952 கட்டுமானப் பணிகளும் ரூ.11.64 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டன.

2015–16 ஆம் ஆண்டில், தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் 3710 எக்டர் பரப்பில் மண்வள பாதுகாப்புப் பணிகளும், 255 கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.2.2. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டமானது சுற்றுச்சூழல் மீட்டெடுப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் வளர்ச்சி ஆகியவற்றை குறிக்கோள்களாக கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகளும் நிலச்சரிவு தடுப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தனியார் நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கான செலவில் இதர விவசாயிகள் 10 விழுக்காடும் ஆதிதிராவிடர் மற்றும்



பழங்குடியின விவசாயிகள் 5 விழுக்காடும் பயனாளிகளின் பங்களிப்பாக செலுத்தவேண்டும். சமுதாய நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளும் நிலச்சரிவு தடுப்புப் பணிகளும் 100 விழுக்காடு திட்ட நிதியில் இருந்து செயல்படுத்தப்படுகிறது.

2014–15 ஆம் ஆண்டில் 895 மண், நீர்வள பாதுகாப்பு அமைப்புகள் கட்டப்பட்டுள்ளன. 35 கிலோ மீட்டர் நீளத்திற்கு வாய்க்கால் அகலப்படுத்துதல் மற்றும் நேர்ப்படுத்துதல் பணிகள் ரூ.5.67 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டன.

### 2.2.3. அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிருஷ்ணகிரி மற்றும் குந்தா அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பணிகள் மேற்கொள்ளல்

உலகவங்கி உதவியுடன் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு திட்டம் கிருஷ்ணகிரி மற்றும் குந்தா அணைகளில் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப்பாதுகாப்பு பணிகள் மேற்கொள்வதன் மூலம் பல்நோக்கு நீர்த்தேக்கங்களில் வண்டல்மண் படிவதைத் தடுத்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் குந்தா மற்றும் கிருஷ்ணகிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப்பாதுகாப்புப் பணிகள் 2014–15 முதல் 2016–17 வரை மூன்று ஆண்டு காலத்தில் ரூ.15.41 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த திட்டமிடப்–பட்டுள்ளது.

**2.2.4. இராமநாதபுரம் மாவட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பண்ணை குட்டைகளை மேலும் ஆழப்படுத்துதல்**

மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்புகளில் பண்ணைக்குட்டைகள் அமைப்பது சிக்கனமானது என்பதால், விவசாயிகளிடத்தில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. பண்ணைக்குட்டைகளில் தேக்கி வைக்கப்பட்டுள்ள நீரைக் கொண்டு, பயறு வகைகள் மற்றும் சிறு தானியங்கள் போன்ற மானாவாரி பயிர்களின் முக்கிய பயிர்வளர்ச்சிக்காலங்களிலும், கூடுதல் பாசனம் அளிக்க இயலும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் மாநாட்டில் அறிவித்ததற்கிணங்க, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் பண்ணைக்குட்டைகள் அரை மீட்டர் ஆழத்திற்கும் பின்னர் இயந்திரங்களை உபயோகித்து இரண்டு மீட்டர் ஆழம் வரை துறையின் மூலம் மேலும் ஆழப்படுத்தப்படுகின்றன. 2013–14 ஆம் ஆண்டில் 311 பண்ணைக் குட்டைகள் ரூ.1.51 கோடி செலவில் ஆழப்படுத்தப்பட்டன. 2014–2015 ஆம் ஆண்டில் 973 பண்ணைக் குட்டைகள் ரூ.4.72 கோடி செலவில் ஆழப்படுத்தும் பணிகள் செயல் படுத்தப் பட்டது. 2015–16 ஆம் ஆண்டில் 1755 பண்ணைக் குட்டைகள் ரூ.8.77 கோடி மதிப்பீட்டில் ஆழப்படுத்த திட்டமிடப்–பட்டுள்ளது.

2015–16 ஆம் ஆண்டில், நீடித்த வேளாண்மைக்கான தேசிய இயக்கம் மூலம் பெரம்பலூர், புதுக்கோட்டை, சிவகங்கை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய ஐந்து மாவட்டங்களில், 50 விழுக்காடு மானியத்தில், 32 பண்ணைக் குட்டைகள் அமைக்க மத்திய அரசு முதல் தவணையாக ரூ.16.82 இலட்சம் ஒப்பளிப்பு அளித்துள்ளது.



**2.2.5. நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் மூலம் நீர் செறிவூட்டு குழாய் அமைத்தல்**

2014–15 ஆம் ஆண்டில் நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் மூலம் ரூ.2.98 கோடியில் 497 நீர் செறிவூட்டும் குழாய் பணிகள் மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய ஏழு மாவட்டங்களில் நிலத்தடி நீர் ஆதாரத்தைப் பெருக்க செயல்படுத்தப்பட்டன.

**2.3. நீர் மேலாண்மை**

வேளாண்மையின் வெற்றிக்கு நீர்ப்பாசனம் முக்கியமாகும். தமிழ்நாட்டின் மொத்த நீர்வள ஆதாரத்தில் 90 சதவிகிதம் வரை ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டுள்ளது. வாய்க்கால் பாசன முறையில் நீர் பயன்பாட்டுத்திறன் 35 முதல் 40 விழுக்காடு என்ற அளவிலேயே உள்ளதால் நீரினை தேவைக்கேற்ப சிக்கனமாகப் பயன்படுத்துவது அவசியமாகும்.

**2.3.1. விரைவுப்பாசன நலத்திட்டத்தின் கீழ் பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம்**

மத்திய அரசின் விரைவுப் பாசன நலத்திட்டத்தின் கீழ் பாசனப்பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டமானது, மத்திய மாநில அரசுகளின் நிதி உதவி பங்களிப்பு 50 : :50 என்ற விகிதத்தில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

2014–15 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் வைகைத் திட்டம் (இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் மதுரை மாவட்டங்கள்), காளிங்கராயன் அணைக்கட்டு திட்டம் (ஈரோடு மாவட்டம்), மணிமுக்தா நதி திட்டம் (விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்கள்), பிலாந்துறை அணைக்கட்டு திட்டம் (கடலூர் மாவட்டம்), எல்லிஸ் அணைக்கட்டு திட்டம் (விழுப்புரம் மாவட்டம்), செய்யாறு அணைக்கட்டு திட்டம் (திருவண்ணாமலை மாவட்டம்) ஆகிய பாசன பகுதிகளில் 2113 எக்டர் பரப்பில் ரூ.19.25 கோடி நிதி ஒதுக்கீட்டில் பணிகள் செயல்படுத்தப்பட்டது.

2015–16 ஆம் ஆண்டில், பாசனப் பகுதி மற்றும் நீர் மேலாண்மை திட்டத்தினை வைகை திட்டம் நீங்கலாக மற்ற ஐந்து நடப்பு திட்டப் பகுதிகளில் தொடர்ச்சியாக செயல்படுத்திட 11,200 எக்டர் பரப்பில் ரூ.44.30 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் பாசனப் பகுதி மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் புதிதாக கலிங்களார் நிச்சாப நதி பாசன திட்டம் (திருநெல்வேலி, விருதுநகர் மாவட்டங்கள்), கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்திட்டம் (கிருஷ்ணகிரி மாவட்டம்), குதிரையாறு நீர்த்தேக்கத்திட்டப்பகுதிகளில் (திண்டுக்கல், திருப்பூர் மாவட்டங்கள்) 5000 எக்டர் பரப்பில் ரூ.21.07 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**பங்கேற்பு முறையில் பாசன நீர் மேலாண்மை**

பாசன நீர்ப்பயன்படுத்துவோர் சங்கங்களை வலுப்படுத்துவதற்காக, 2014–15 ஆம் ஆண்டு முதல், ஒருமுறை செயல்பாட்டு மானியம் ஒரு எக்டருக்கு ரூ.1200/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இதில் இருந்து பெறப்படும் வட்டித் தொகையினைக் கொண்டு, இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் கட்டமைப்புகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இதுவரை



9,35,664 எக்டர் பரப்பளவிற்கு 33 பாசன திட்டங்களில் 1989 பாசன நீர்ப் பயன்படுத்துவோர் சங்கங்கள் / பாசன சபைகள் அமைக்கப்பட்டு பராமரிப்பு மானியமாக ரூ.37.86 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.2. உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் 2007–08 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 48,302 எக்டர் பரப்பில் நுண்ணீர்பாசன அமைப்புகளும், 2,691 பண்ணைக் குட்டைகளும் அமைக்கப்பட்டுள்ளன. உபவடிநில விவசாயிகளுக்கு வாடகைக்கு அளிக்க பாசன நீர்ப் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கு 800 பண்ணைக் கருவிகள் வழங்கப்பட்டதுடன் 882 மழைநீர் சேகரிப்பு கட்டுமானங்கள், 12 இடங்களில் நிலத்தடி குழாய் பாசனப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2014–15 மற்றும் 2015–16 ஆம் ஆண்டுகளில் இத்திட்டம் ரூ.22.70 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 30.06.2015–ல் முடிவுற்றது.

### 2.3.3. சிவகங்கை மாவட்டத்தில் சமுதாய ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைக்கும் திட்டம்

சிவகங்கை மாவட்டத்தில் 12 சமுதாய ஆழ்துளை குழாய் கிணறுகள் 50 விழுக்காடு மானியத்தில் விவசாயிகள் குழுக்களுக்கு அமைத்துத் தர, தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின்கீழ் ரூ.20.29 இலட்சம் நிதி வழங்கப்பட்டது. 10 முதல் 15 விவசாயிகளைக் கொண்ட

பயனாளிகள் குழு உருவாக்கப்பட்டு, பதிவு செய்யப்படுவதுடன் குறைந்த பட்சம் 10 எக்டர் பரப்பளவிற்கு, ஒரு ஆழ்துளைக்குழாய் கிணறு என்ற வீதத்தில் அமைக்கப்படுகிறது. ஆழ்துளைக்குழாய் கிணறு அமைக்கும் செலவில் 50 சதவிகிதம் துறையின் நிதியுதவியுடனும், மீதமுள்ள 50 சதவிகிதம் பங்களிப்புத்தொகையாக பயனாளிகள்குழுவும் செலுத்த வேண்டும். 12 எண்கள் ஆழ்துளைக்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

**3. சூரிய சக்தி – புதுமையான திட்டங்கள்**

**3.1. வேளாண் பொருட்களை உலர வைப்பதற்கு விவசாயிகள் மற்றும் விவசாயிகள் குழுக்களுக்கு சூரிய கூடார உலர்த்தி அமைப்புகள்வழங்குதல்**

வேளாண் பணிகளுக்கு சூரிய சக்தியினை பயன்படுத்தவும் மாநில அரசு ஊக்குவித்து வருகிறது தேங்காய், மிளகாய், முருங்கை இலை, மக்காச்சோளம், வாழைப்பழம், தக்காளி போன்ற வேளாண் பொருட்களை விரைவாக உலர வைப்பதற்கு ஏதுவாக சூரிய கூடார உலர்த்திகள் 50 விழுக்காடு மானியத்தில் நிறுவப்படுகின்றன.

2014–15 ஆம் ஆண்டில் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின்கீழ் ரூ 4.00 கோடி மதிப்புள்ள 100 பாலி கார்பனேட் தகடுகள் கொண்ட பசுமைக் குடில் வகை சூரிய கூடார உலர்த்திகள் (குறைந்தபட்சம் 400 சதுர அடி பரப்பு கொண்டது) 50 விழுக்காடு மானியத்தில், (ரூ.2.00 கோடி மானியத்தில்) நிறுவிட ஒப்பளிப்பு வழங்கப்பட்டு தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் நிறுவப்பட்டு வருகின்றன.

2015–16 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கூடுதலாக 50 பாலி கார்பனேட் தகடுகள் கொண்ட சூரிய கூடார உலர்த்திகள் 50 விழுக்காடு மானியத்தில் ரூ.3.00 கோடி மதிப்பில் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



**3.2. தானியங்கி சாய்மான வசதியுடன் கூடிய சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டு அமைப்புகளை வழங்கும் திட்டம்**

சூரிய சக்தியால் இயங்கும் 2000 பம்பு செட்டுகள் நுண்ணீர் பாசன வசதி அமைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 50 விழுக்காடு மானியம் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழும், 30 விழுக்காடு மத்திய அரசின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையின் கீழும் ஆக மொத்தம் 80 விழுக்காடு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

குழாய் கிணறுகள், திறந்தவெளிக்கிணறுகள் மற்றும் தரைநிலைத் தொட்டிகள் ஆகிய மூன்று வகைகளில் மொத்தம் 1750 எண்கள் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட் அமைப்புகளை நிறுவுவதற்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் 1299 எண்கள் ரூ.34.50 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2015–16 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 4. வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கக் கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மைக் கல்வி, வேளாண்மை ஆராய்ச்சி, வேளாண்மை விரிவாக்கக் கல்வி ஆகிய பணிகளைக் மேற்கொண்டு வரும் முன்னோடி நிறுவனமாகும். வேளாண்மைப் பள்ளி என்ற பெயரில் சைதாப்பேட்டையில் 1868 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, மதராஸ் வேளாண்மைக் கல்லூரி என்ற பெயரில் கோயம்புத்தூருக்கு 1906 ஆம் ஆண்டு மாற்றப்பட்டு, இளநிலை வேளாண்மைப் பட்டப்படிப்பு 1920 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இக்கல்லூரி 1971 ஆம் ஆண்டு பல்கலைக்கழக அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் என்றழைக்கப்பட்டது. எட்டு மாணவர்களுடன் துவங்கப்பட்ட நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த, இப்பல்கலைக்கழகத்தில், தற்போது 4000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். அமெரிக்கா, ஈரான், எகிப்து, சூடான், நேபாளம் மற்றும் எதியோபியா ஆகிய நாடுகளில் இருந்து மாணவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயின்று வருகின்றனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு 2014–15 ஆம் ஆண்டு, சிறப்பு மிக்க இரண்டு விருதுகள் வழங்கப்பட்டன அவை; 1)' இந்திய தொழில் மற்றும் வர்த்தக சங்கங்களின் கூட்டமைப்பு, 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் தேதி, '**ஒட்டுமொத்த சிறப்பிற்கான விருதினை** புது தில்லியில் வழங்கியது. 2) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை வணிக இயக்ககத்திற்கு 18–19, மே 2014 இல் இந்திய அரசின் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தால் '**வேளாண் வணிக சாதனையாளர் முகாம் விருது**' வழங்கப்பட்டது.



### 1.0. வேளாண்மைக் கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் 15 உறுப்புக் கல்லூரிகள் மற்றும் எட்டு உறுப்பு பட்டையப்படிப்பு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் தற்பொழுது 13 இளமறிவியல், 35 மூதறிவியல் மற்றும் 26 முனைவர், நான்கு ஒருங்கிணைந்த முனைவர் மற்றும் 27 பகுதி நேர முனைவர் பட்டப் படிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2014–15 ஆம் ஆண்டில், இளநிலைப் பட்டப்படிப்பில் 1352, முதுநிலைப் பட்டப் படிப்பில் 457 மற்றும் 138 மாணவர்கள் முனைவர் பட்டப் படிப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர். 2013–14 ஆம் ஆண்டில் இளநிலைப் பட்டப்படிப்பில் 1141, முதுநிலைப் பட்டப்படிப்பில் 355 மற்றும் முனைவர் பட்டப்படிப்பில் 137 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இரட்டைப் பட்டப் படிப்பினில் டல்ஹவுசி பல்கலைக் கழகம், கனடாவில் கல்வி பயின்றதில் இதுவரை 22 மாணவர்கள் இரட்டைப் பட்டத்துடன் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் மூலமாக பல்வேறு அஞ்சல் வழிப் பாடத் திட்டங்களை வழங்கி வருகிறது. தற்பொழுது, ஐந்து முதுநிலைப் பட்டயப் படிப்புகள், மூன்று முதுநிலைப் பட்டப் படிப்புகள், ஒரு இளநிலைப் பட்டப் படிப்பு மற்றும் பதினாறு சான்றிதழ் படிப்பு ஆகிய பாடங்களை இவ்வியக்ககம் வழங்கி வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மாணவர் நல இயக்ககம் வாயிலாக வேலை வாய்ப்பு ஆலோசனைகளை வழங்கி வருகிறது. மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு

அமைப்பை ஏற்படுத்தி வேளாண் பட்டதாரிகளுக்கு வெளிநாட்டில் வேலை வாய்ப்பைப் பெற உதவி வருகிறது. பட்டதாரிகளின் மென் திறனை மேம்படுத்த அதி நவீன கருத்துப் பரிமாற்ற ஆய்வகத்தையும் இவ்வியக்ககம் கொண்டுள்ளது.

2014–15 ஆம் ஆண்டு, மூன்று புதிய வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், ரூ.150 கோடி திட்ட மதிப்பீட்டில் திருவண்ணாமலை மாவட்டம் வாழவச்சனூர், தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டை மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலையில் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. திருச்சிராப்பள்ளி மாவட்டம் குமுளூரில் உள்ள வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், ஒரு திறன் மேம்பாட்டு மையம் துவங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 27.06.2014 அன்று பல்கலைக்கழகத்தின் 12 புதிய கட்டிடங்கள் (ரூ.5.74 கோடி) திறந்து வைக்கப்பட்டன. அவையாவன; கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் புதிய மாணவியர் விடுதி, பயிர்வினையியல் துறையின் முதல் தளத்தில் முதுநிலை விரிவுரை அரங்கம், காய்கறி துறையில் முதல் தளம் கட்டும் பணி, காலநிலை ஆராய்ச்சி மையத்தில் வகுப்பறை மற்றும் ஆய்வுக்கூடம், கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் மாவட்ட வேளாண் அறிவியல் நிலையங்களில் நிர்வாகக் கட்டிடம், கடலூர் மாவட்டத்திலுள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் புதிய அலுவலகக் கட்டிடம், பாலூரில் காய்கறி ஆராய்ச்சி நிலையத்தில் புதிய அலுவலகக் கட்டிடம், குமுளூர், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் விரிவுரை அரங்கம், புதுக்கோட்டை மாவட்டம்,



வம்பன் தேசியப் பயறு வகை ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகள் விடுதி, திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் ஆராய்ச்சி நிலையத்தில் விரிவுரை அரங்கம் மற்றும் தேர்வு அறை ஆகும். மேலும், அன்றைய தினமே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களில் ஒன்பது புதிய கட்டிடங்களுக்கான (ரூபாய் 12.03 கோடி) அடிக்கல் நாட்டப்பட்டன. மேலும், திருச்சியில் மகளிருக்கான தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூபாய் 14.55 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நிர்வாகக்கட்டிடம் மற்றும் மகளிர் தங்கும் விடுதி ஆகியவை திறந்து வைக்கப்பட்டன.

## 2.0. வேளாண்மை ஆராய்ச்சி

தமிழ்நாடு முழுவதும் 38 வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் அந்தந்த பகுதியில் உள்ள பயிர்களுக்கேற்ப ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன. பல்கலைக்கழகம் இதுவரை, 788 புதிய பயிர் இரகங்கள், 158 வேளாண் கருவிகள் மற்றும் 1523 பயிர் மேலாண்மைத் தொழில் நுட்பங்களை வெளியிட்டுள்ளது. மேலும், விவசாயிகள் உள்ளிட்ட பல்வேறு பயனாளிகள் பயன்பெறும் வகையில் 637 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான இதழ்களில் கடந்த ஒரு ஆண்டில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

கீழ்க்காணும் ஆறு பயிர் இரகங்கள் மற்றும் ஒரு வீரிய ஒட்டு இரகத் தென்னை 2014–15 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளன.

1. நெல் டிகேஎம் 13

டிகேஎம் 13 மத்திம சன்ன அரிசியைக் கொண்ட நெல் இரகமாகும். இது 130 நாட்களில் பிரபலமான பிபீடி 5204 இரகத்தைக் காட்டிலும் 7–10 நாட்கள் முன்பே முதிர்வடையும். சராசரி மகசூலாக எக்டருக்கு 5938 கிலோ தரவல்லது. இது பீபிடி 5204 நெல் இரகத்தை விட 10.1 சதம் அதிகமாகும். இந்த இரகம் இலைச்சுருட்டுப்பழு, குருத்துப் பூச்சி, பச்சை தத்துப்பூச்சி, குலைநோய், நெல் துங்குரோ நோய், செம்புள்ளி மற்றும் இலைஉறை அழுகல் நோய் ஆகியவற்றிற்கு மிதமான தாங்கும் திறன் கொண்டது. நல்ல அரவைத்திறன் (75.5%) மற்றும் முழு அரிசி காணும் திறன் (71.7%) ஆகியன இதனுடன் ஒப்பிட்டுப் பார்த்த பீபிடி 5204 இரகத்தை ஒத்து இருக்கும்.

2. நெல் சி ஆர் 1009 சப் 1

இந்த இரகமானது, நெல் சி ஆர் 1009 ஐ விட மேம்பட்டது, அதாவது நடவு செய்தது முதல் 15 நாட்கள் வரை நீரில் மூழ்கினாலும் தாங்கி வளரக்கூடிய திறன் கொண்டது. சராசரி மகசூலாக எக்டருக்கு 5759 கிலோ 155 நாட்களில் தரவல்லது. பழுப்பு இலைப்புள்ளி நோய், குலைநோய், புகையான் மற்றும் வெள்ளை தத்துப்பூச்சிக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. இந்த நீண்ட கால இரகமானது தமிழ் நாட்டில் சம்பா பருவத்திற்கும் ஏனைய நீண்ட கால இரகங்கள் சாகுபடி செய்யும் வெள்ளம் தாக்கும் பகுதிகளுக்கும் ஏற்றது. இந்த இரகத்தை சிஆர் 1009 நெல் இரகத்திற்கு மாற்று இரகமாக பயிரிடப் பரிந்துரைக்கப்படுகிறது.

3. நெல் எம்டியு 6

இந்த இரகம் 110–115 நாட்களில் முதிர்வடைந்து சராசரி மகசூலாக இறவையில் எக்டருக்கு 6118 கிலோ தானிய



மகசூல் தரவல்லது. நீண்ட சன்னரக அரிசியை உடைய இந்த இரகம் சமையல் செய்யும் போது நீட்சி அடையும் பண்புடையது. இந்த இரகத்தை தமிழ் நாட்டில் நீலகிரி மாவட்டத்தைத் தவிர மற்ற பகுதிகளில் நடவுப் பயிராகப் பயிரிடலாம்.

4. சோளம் கே 12

நன்கு வறட்சியைத் தாங்கி வளரும் தன்மை கொண்ட இந்த இரகம் தானியம் மற்றும் தீவனப்பயிராகவும் பயிரிடலாம். இந்த இரகம் 95 நாட்களில் முதிர்வடையும். முத்து வெள்ளை நிற தானியம் கொண்ட இந்த இரகம், எக்டருக்கு 3123 கிலோ தானிய மகசூல் மற்றும் 11,900 கிலோ உலர் தீவனத்தட்டை தரவல்லது. இது சூரிய ஒளித்தாக்கத்துக்கு உட்படாத, குருத்து ஈ மற்றும் தண்டு துளைப்பானுக்கு மிதமான எதிர்ப்புத் தன்மையும், அடிச் சாம்பல் நோய்க்கு எதிர்ப்புத் தன்மையும் கொண்டது. இந்த இரகம் தமிழக தென்மாவட்டப்பகுதி சாகுபடிக்கும், தென்காசி பகுதியில் கோடையில் இறவைப் பயிராகவும் பயிரிட ஏற்றது.

5. கோதுமை கோடபிள்யு 3

இந்த உயர் விளைச்சல் கோதுமை இரகம் தென் தமிழக மலை மற்றும் மலைசார்ந்த பகுதிகளில் பயிரிடலாம். இதன் தானிய மகசூல் (எக்டருக்கு 4076 கிலோ) தற்போதைய பிரபலமான கோடபிள்யூ 1 இரகத்தைவிட (எக்டருக்கு 3641 கிலோ) 12 சதம் அதிகமாகும். இது தண்டு, இலை மற்றும் பட்டைத் துரு நோய்களுக்கு எதிர்ப்புத் திறன் கொண்டது. இந்த இரகம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள மூன்றாவது கோதுமை இரகமாகும்.

6. கொத்தவரை எம்டியு 1

இந்த இரகம் 90 – 100 நாட்களில் முதிர்வடையும். மேலும், மற்ற கொத்தவரை இரகங்களைவிட அதிகக் காய்கள் (செடிக்கு 150–175 காய்கள்) காய்க்கக்கூடியது. இந்த கொத்தவரை இரகக் காய்களில் அதிக நார்ச்சத்து (100 கிராம் காய்க்கு 4.5 கிராம்) உடையது மற்றும் மேல்சாம்பல் நோயைத் தாங்கி வளரும் தன்மையுடையது.

7. தென்னை வீரிய ஒட்டு இரகம் வி.பி.எம்.5

இந்தியாவிலேயே முதன் முறையாக வெளியிடப்பட்ட நெட்டை X நெட்டை வீரிய ஒட்டு தென்னை இரகமாகும். இந்த இரகமானது 48–50 மாதங்களிலேயே மகசூல் தந்து பொருளாதார ரீதியாக 60 ஆண்டுகள் காய்க்கக் கூடியது. சராசரியாக, ஆண்டிற்கு மரம் ஒன்றுக்கு 161 காய்கள் மற்றும் மரத்திற்கு 24.12 கிலோ கொப்பரை தரவல்லது.

கீழ்க்காணும் இரண்டு பண்ணைக் கருவிகளும் உழவர்கள் பயன்பாட்டிற்காக வெளியிடப்பட்டுள்ளன.

1. டிராக்டரால் இயங்கும் மஞ்சள் கரணை விதைக்கும் கருவி

இந்த புதிய விதைக்கும் கருவியை 35–45 எச்.பி. டிராக்டரை கொண்டு இயக்க முடியும். ஒரே நேரத்தில் மூன்று சால்களில் சீரான இடைவெளியில் மஞ்சள் கரணைகளை விதைக்க முடியும். சால்களுக்கு இடையேயான தூரத்தை தேவைக்கேற்றவாறு மாற்றியமைக்க முடியும். இக்கருவியைக் கொண்டு நாளொன்றுக்கு 1.2 எக்டர் நிலத்தில் விதைக்கலாம். இக்கருவியின் தற்போதய விலை ரூ, 50,000/– ஆகும்.



2. டிராக்டரால் இழுக்கப்படும் இரு சக்கர டிரெய்லரை திரவ ஆற்றலால் நிறுத்தும் கருவி

டிராக்டரில் இணைக்கப்படும் இருசக்கர டிரெய்லரை நிறுத்த எந்தவிதத் தனிக்கருவியும் இல்லை. டிராக்டர் நிறுத்தப்படும் பொழுது முதலில் டிராக்டர் நின்றவுடன் சுமையுடன் கூடிய டிரெய்லர் இடித்து ஆற்றாமையினால் தானாக நிற்கும். டிரெய்லரை எளிதாக நிறுத்துவதற்கும் மற்றும் சுமையை சரிக்கவும் ஒரு நிறுத்தும் கருவி வடிவமைக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுத்தும் கருவியின் விலை ரூ. 41,000/– ஆகும்.

2015–16 ஆம் ஆண்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் ஆறு புதிய மகத்துவ மையங்கள் ரூ. 22.96 கோடி மதிப்பீட்டில் துவக்கப்பட உள்ளன.

1. கோயம்புத்தூரில் மூலக்கூறு மரபியல் மகத்துவ மையம்.
2. செட்டிநாட்டில் உள்ள மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மானாவாரி பண்ணையத்திற்கான மகத்துவ மையம்.
3. திருச்சிராப்பள்ளி வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மண் வளத்திற்கான மகத்துவ மையம்.
4. மதுரையில் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புதுமை மையம்.
5. திருச்சிராப்பள்ளி மகளிர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பண்ணை மகளிர் அறிவு மையம்.

6. பட்டுக்கோட்டையில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் எண்ணெய் பனை ஆராய்ச்சிக்கான மகத்துவ மையம்.

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் தாலூக்காவில் 4.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எலுமிச்சை ஆராய்ச்சி நிலையம் தொடங்குவதற்கு நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்றுவருகிறது.

மேலும், 2014–15 ஆம் ஆண்டு, உணவுப் பதனிடுதல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சிவகங்கை மாவட்டம் செட்டிநாட்டில் துவங்கப்பட்டது.

### 3.0. வேளாண் விரிவாக்கக் கல்வி

வேளாண்மை விரிவாக்கக் கல்வி இயக்ககம், 'விவசாயி உந்துதல் மற்றும் சந்தை வழி' முறைகளைப் பின்பற்றி வேளாண் உற்பத்தி, உற்பத்தித்திறன் மற்றும் வருவாயைப் பெருக்க கீழ்க்காணும் பணி முறையில் செயல்படுகிறது. இது விரிவாக்கம் மற்றும் வளர்ச்சித் துறைகளை, தகவல் தொடர்பு தொழில்நுட்ப உதவியுடன் இணைந்து செயல்பட முக்கியத்துவம் அளித்து வருகிறது.

கீழ் காணும் துறைகள் இவ்வியக்கத்தில் செயல்பட்டு வருகின்றன.

### 3.1. வேளாண் அறிவியல் நிலையங்கள்

இவை, விவசாயிகளின் பயிர் சார்ந்த தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு ஆய்வகத்திலிருந்து பண்ணை வயல்களுக்கு தொழில்நுட்பப் பரிமாற்றத்திற்காக, 1974 ஆம் ஆண்டு பண்ணை அறிவியல் மையம் என்ற பெயரில் துவங்கப்பட்டன. பிறகு, **வேளாண்மை அறிவியல் நிலையம்** என அழைக்கப்பட்டன. வேளாண் அறிவியல் நிலையங்களின்



செயல்பாடுகள் தொழில்நுட்பத்தை பரிசோதித்தல், மேம்படுத்துதல், விவசாயிகளுக்கு கொண்டு செல்லுதல் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே பாலமாக திகழ்தல்.

பண்ணை வழி ஆராய்ச்சிகளோடு, வேளாண் அறிவியல் நிலையங்கள், தொழில் சார்ந்த பயிற்சி மையமாகத் திகழ்கின்றன. மாநிலத்தில் 28 வேளாண்மை அறிவியல் நிலையங்கள், இவற்றில் 14 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தாலும் மற்றும் 14 அரசு சாரா அமைப்புகளாலும் நடத்தப்படுகின்றன.

பதினான்கு வேளாண் அறிவியல் நிலையங்கள் மூலம், தொழில்நுட்பப் பரிமாற்றங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மொத்தம், 774 பண்ணை வழி ஆய்வுகள், புதியதாக வெளியிடப்பட்ட இரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்களில் 348 முதல் நிலை செயல் விளக்கத்திடல்கள் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. மேலும், 396 பயிற்சிகள் விரிவாக்க அலுவலர்கள், கிராமப் புற இளைஞர்கள் மற்றும் சுயஉதவி குழுக்களுக்கும் 2014–15 ஆண்டில் அளிக்கப்பட்டன.

வேளாண் அறிவியல் நிலையங்கள் முன்னோடி விவசாயிகளுக்கு பயிற்சிகள் அளித்து மற்ற விவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்பங்களைப் பரவலாக்கம் செய்து வருகின்றன. விவசாயிகளின் திறமை குறித்த தரவுத் தளம் பின்வரும் இனங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. **வேளாண் அறிவியல் நிலையம் அங்கீகரிக்கப்பட்ட வேளாண் தொழில் முனைவோர்கள்** – தொழில் முனைவோருக்கான தகுதிகள் உடைய விவசாயிகள் கண்டறியப்பட்டு வேளாண் சார்ந்த தொழில்

நிறுவுதல், அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் போன்ற ஆலோசனைகளை வழங்க ஆயத்தப்படுத்தப்படுகின்றனர்.

2. **வேளாண் அறிவியல் நிலையம் அங்கீகரிக்கப்பட்ட உழவர் ஆசிரியர்கள்** – வேளாண்மையில் நல்ல அனுபவம் மற்றும் தகவல் பரிமாற்றத்திறன் கொண்ட விவசாயிகளைக் கண்டறிந்து **துணை – வேளாண்அணி** மாவட்டத்திலுள்ள மற்ற விவசாயிகளுக்கு திறன் மற்றும் அறிவு பரிமாற்றத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

3. **வேளாண் அறிவியல் நிலையம் அங்கீகரிக்கப்பட்ட விதை உற்பத்தியாளர்கள்** – விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகளின் நேரடி பார்வையில் விதை உற்பத்திச் செய்யப்பட்டு விதை உற்பத்தியாளர்களாக பயிற்சி கொடுக்கப்படுகிறது.

4. **வேளாண் அறிவியல் நிலையம் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த வேளாண் மாதிரி பண்ணை விவசாயிகள்** – ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்த விவசாயிகள் தகவல் ஆவணம் தயாரிக்கப்பட்டு மற்ற ஒருங்கிணைந்த பண்ணையம் அமைக்க விரும்பும் விவசாயிகள் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.



### 3.2. தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான மின்னணு விரிவாக்கம்

இது ஒரு மின்னணு தொழில் நுட்பப் பரிமாற்றத்திற்கான காலம். ஆகவே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மின்னணு தளத்தினை தொழில் நுட்பப் பரிமாற்றத்திற்காக சிறந்த முறையில் கீழ்காணும் அங்கங்களைக் கொண்டு செயல்படுத்தி வருகின்றது.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தின் இணையதளம்** (http://agritech.tnau.ac.in) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை சார்ந்த பல்வேறு ஊடகங்களை உள்ளடக்கிய சுமார் ஏழு இலட்சம் பக்கங்களைக் கொண்டுள்ளது. 2014–15 ஆம் ஆண்டு இவ்விணையதளத்தினை 14.36 இலட்சம் பார்வையாளர்கள் உபயோகித்துள்ளனர். தினசரி பார்வையாளர்கள் எண்ணிக்கை சுமார் 4000 ஆகும்.

**கல்வி ஊடக மையம்,** பல்கலைக்கழகத்தின் முக்கிய நிகழ்வுகளை காணொலிப் படங்களாக பதிவு செய்து வருகிறது. 2014–15 ஆம் ஆண்டு, 557 காணொலி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டன, சென்னை தூர்தர்சன் கேந்திரத்தின் வாயிலாக 252 நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள **சமுதாய வானொலி நிலையம்** பண்ணை சார்ந்த தகவல்களை கோயம்புத்துாரைச் சுற்றியுள்ள 18 கி.மீ தொலைவிற்குள் வசிக்கும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒலிபரப்பு செய்துவருகிறது. வேளாண் பல்கலைக்கழக விவசாயி எப் எம் எனப் பெயரிடப்பட்டு 107.4 மெகா ஹெர்ட்ஸ் அலைவரிசையில் ஒலிபரப்பப்படுகிறது. தினசரி 10.00 மணி முதல் 13.00 மணி

வரை மூன்று மணி நேரத்திற்கும், மறு ஒலிபரப்பு 14.00 முதல் 17.00 மணி வரையும் செய்துவருகிறது.

விவசாயி எப். எம். இல், சீதோஷ்ண நிலை, சந்தை விலை நிலவரம், விஞ்ஞானிகளின் தொழில்நுட்பத் தகவல்கள் ஒலிபரப்பப்படுகின்றன. 2014–15 ஆம் ஆண்டு, 323 வேளாண் நிகழ்ச்சிகள் ஒலிபரப்புவதற்காக பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் 367 நிகழ்ச்சிகள் http://agritech.tnau.ac.in/comm-e-radio.html எனும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்திற்கு அருகிலுள்ள 22 கிராமங்களில் வசிக்கும் 10,000 பண்ணைக் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இது நிகழ்ச்சிகளை ஒலி பரப்பி வருகிறது.

**விவசாயிகள் அழைப்பு மையம் (கிஸான் கால் சென்டர்)** விவசாயிகளுக்கு கட்டணமில்லா 1551 அல்லது 1800 - 180 - 1551 என்ற எண்களுடைய தொலைபேசி மூலமாக சேவைகளை அளித்து வருகிறது. தொலைபேசியில் அழைப்பவர் வட்டார மொழியில் வல்லுநர்களுடன் கலந்துரையாடலாம். இம்மையம் அனைத்து வேலை நாட்களிலும் காலை 7.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை செயல்படுகின்றது. சராசரியாக நாள் ஒன்றுக்கு 790 தொலைபேசி அழைப்புகள் ஏற்கப்படுகின்றன.

**உழவரின் வளரும் வேளாண்மை,** தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் பிரசுரிக்கப்படும் தமிழ் மாத இதழாகும்.

**வேளாண் கால நிலை ஆராய்ச்சி மையம்,** தானியங்கி வானிலை நிலையங்களில் இருந்து பெறப்படும் விபரங்களைக் கொண்டு மத்திய கால **வானிலை முன்னறிவிப்பு** செய்கிறது.



2014–15 ஆம் ஆண்டு, 19,44,562 வானிலை சார்ந்த தகவல்கள் பதிவு செய்த விவசாயிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**தென் மண்டல வேளாண் பெருவிழா 2015,** கோயம்புத்தூர், பல்கலைக்கழக வளாகத்தில் 06.01.2015 முதல் 09.01.2015 வரை நான்கு நாட்களுக்கு நடத்தப்பட்டது. தமிழ்நாடு, கேரளா, ஆந்திரபிரதேசம், தெலுங்கானா, கர்நாடகா ஆகிய ஐந்து தென்மாநிலங்களுடன், புதுச்சேரி மற்றும் அந்தமான் நிக்கோபார் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகள் இவ்விழாவில் பங்கேற்றனர்.

**மண்டல கருத்துக்காட்சி,** 'தானியங்கள், சிறுதானியங்கள், பயறு வகைப் பயிர்கள், பழங்கள் மற்றும் காய்கறிகளில் உணவு பதனிடுதல் மற்றும் மதிப்புக்கூட்டுதல்' என்ற தலைப்பில் மதுரையில் 2015 சனவரி மாதம் 23 முதல் 25 ஆம் தேதி வரை மதுரை, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வேளாண் விற்பனைத் துறை மற்றும் இந்திய வர்த்தக சங்கம் இணைந்து நடத்தப்பட்டது. இவ்விழாவில் தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகள் பங்கு கொண்டனர்.

### 3.3. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையம், சென்னை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையம் சென்னையில் அமைந்துள்ளது. 2014 – 15 ஆம் ஆண்டு 91 பயிற்சிகள் 3406 பயனாளிகளுக்கு வீட்டு காய்கறி தோட்டம் அமைத்தல், பழங்கள் மற்றும் காய்கறிகள் பதப்படுத்துதல், சிறுதானியங்கள் மற்றும் நறுமணப்பயிர்களில் மதிப்பூட்டம் செய்தல், மாடித் தோட்டம்,

உள்ளரங்க தாவரங்களைப் பராமரித்தல் மற்றும் காளான் உற்பத்தி ஆகிய பல்வேறு தலைப்புகளில் நடத்தப்பட்டுள்ளன.

2015–16 ஆம் ஆண்டிலும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

## 4.0. தரமான விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், 115 முக்கிய பயிர் இரகங்களில் வல்லுநர் விதைகள், ஆதார விதைகள், சான்றிதழ் மற்றும் உண்மை நிலை விதைகளை உற்பத்தி செய்து விநியோகித்து வருகிறது.

2014–15 ஆம் ஆண்டு, 1358 குவிண்டால் வல்லுநர் விதைகள், 4034 குவிண்டால் ஆதார விதைகள், 11307 குவிண்டால் சான்றிதழ் மற்றும் உண்மை நிலை விதைகள் மற்றும் 27,69,350 நாற்றுக்கள் மற்றும் நடவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டுள்ளன.

இத்திட்டம் 2015–16 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படும்.

**தானியங்கி விதை விற்பனை இயந்திரம்,** கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் மூலம், சிறு விவசாயிகள் மற்றும் வீட்டுக் காய்கறித் தோட்டத்திற்குத் தேவையான காய்கறி மற்றும் மலர் பயிர் விதைகளை பெறுவதற்கு இயலும். இதுவரை, 2.50 இலட்சம் மதிப்புள்ள 25000 பாக்கெட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. தானியங்கி விதை விற்பனை இயந்திரம்; திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, தேனி, திருநெல்வேலி, சேலம், திருவண்ணாமலை மற்றும் சென்னையில் இரண்டு



இடங்கள் என மேலும் ஒன்பது இடங்களிலும் 2014 – 15 ஆம் ஆண்டு நிறுவப்பட்டுள்ளன.

## 5.0. வேளாண் வணிக மேம்பாடு

வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம், வேளாண் சார்ந்த துவக்கநிலை தொழில் நிறுவனங்களைக் கருவிலிருந்து உருவாக்கியும், பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பங்களை வணிகப்படுத்தியும் செயல்பட்டு வருகிறது. சுமார் 100 நிறுவனங்கள் இம்முறையில் இவ்வியக்ககத்தில் பதிவு செய்துள்ளன. இதுவரை, 20 தொழில்நுட்பங்கள் வணிகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில், தென்னை டானிக், பஞ்சகாவ்யா, பூச்சி முட்டைகளை நீக்கும் கருவி, திருந்திய நெல் சாகுபடிக்கு ஏற்ற களை எடுக்கும் இயந்திரம், *சூடோமோனாஸ்* மற்றும் *ட்ரைகோடெர்மா* நுண்ணுயிரிகள் உற்பத்தி ஆகியவை குறிப்பிடத் தக்கவைகளாகும். 2014–15 ஆம் ஆண்டு, மூன்று தொழில்நுட்பங்கள் முறையே; (1) நெல்லில் பூச்சி விரட்டி, (2) மணிச்சத்தினை கரைத்துக் கொடுக்கும் நுண்ணுயிர் திரவ உரம் மற்றும் (3) பயறுவகை பயிர்களில் பூச்சி முட்டைகளை அகற்றும் கருவி ஆகியன வணிகப்படுத்தப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகம், 10591 லிட்டர் தென்னை டானிக், 2009 லிட்டர் பயறு ஒன்டர், 1233 லிட்டர் நிலக்கடலை ரிச், 475 லிட்டர் மக்காச்சோள மேக்ஸ், 607 லிட்டர் பருத்தி பிளஸ், 446 லிட்டர் கரும்பு பூஸ்டர், 8442 கிலோ *சூடோமோனாஸ்*, 5211 கிலோ *டிரைக்கோடர்மா விரிடி* மற்றும் 7528 காளான் தாய் வித்து புட்டிகள் உற்பத்தி செய்து விநியோகித்துள்ளது.

### உணவு பதனிடுதல் மற்றும் மதிப்பு கூட்டுதல்

அறுவடைப் பின்சார் தொழில்நுட்ப மையத்தில், தொழில் முனைவோர்களுக்கும் கிராமப்புற இளைஞர்கள்

மற்றும் மகளிருக்கும் காய்கறி மற்றும் பழப்பயிர்களில் உணவு மதிப்புக் கூட்டுதல் மற்றும் அறுவடைக்குப் பின்சார் தொழில்நுட்பங்கள் சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 2014–15 ஆம் ஆண்டில் 27 பயிற்சிகள் 594 விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

2015–16 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து பயிற்சிகள் வழங்கப்படும்.

**6.0. சந்தை மற்றும் விலை முன்னறிவிப்பு சேவைகள்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் விலை முன்னறிவிப்பு மற்றும் சந்தை நுண்ணறிவு சேவைகளைத் தனது உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையத்தின் (DEMIC) மூலம் அளித்து வருகிறது. வேளாண் பொருட்களின் உள்ளூர் சந்தை விலைகளை விதைப்பிற்கு முன்பும் அறுவடைக்கு முன்பும் முன்னறிவிப்பு செய்கிறது. இத்தகவல்கள் நாளிதழ்களிலும், வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமும் வெளியிடப்படுகின்றன. இம்மையம், மக்காச்சோளம், சோளம், கேழ்வரகு, கம்பு, உளுந்து, கொண்டைக்கடலை, பச்சைப்பயறு, நிலக்கடலை, எள், சூரியகாந்தி, தேங்காய், கொப்பரைத் தேங்காய், பருத்தி, உருளைக்கிழங்கு, கேரட், பீட்ரூட், தக்காளி, வெண்டைக்காய், கத்தரிக்காய், மஞ்சள், சிறிய வெங்காயம், மிளகாய் வற்றல், கொத்தமல்லி, வாழைப்பழம் (நேந்திரன் மற்றும் பூவன்) ஆகிய 24 வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு விலை முன்னறிவிப்பு செய்கிறது. விலை முன்னறிவிப்பானது 95 விழுக்காடு துல்லியமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

தொழில் நுட்பம் மற்றும் சந்தைப் படுத்துவதற்கான ஆலோசனைகளும் கைபேசி மூலமாக மின்னணு விரிவாக்க மையம் '**எம் – கிசான்**' திட்டத்தின் மூலம் அளிக்கப்பட்டு



வருகின்றன. 2014–15 ஆம் ஆண்டில் 9000 சந்தை தகவல்கள் 6,45,02,766 குறுந்தகவல்கள் மூலம் பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டன. தொடர்ந்து விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பல்கலைக்கழகத்தின் **வணிகம் மற்றும் அறிவுசார் சொத்துரிமைக் காப்புத்துறை**, காப்புரிமைப் பெறுவதற்காக; (1) வெங்காய விதை சுத்திகரிப்புக் கருவி, (2) வெங்காய அறுவடைக்கு முன், அறுவடை சமயம் மற்றும் முன் சுத்திகரிப்புக் கருவி, இவற்றுடன் (3) மூலிகை வடிசாறு விநியோக இயந்திரம் ஆகியவற்றை 2014 – 2015 ஆம் ஆண்டில் பதிவு செய்துள்ளது.

## 5. விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றளிப்புத்துறை

அதிக வேளாண் உற்பத்தித் திறனை அடைவதற்கு, நல்ல தரமான சான்று விதைகளின் உபயோகம் அவசியமாகிறது. இத்துறை, விதை உற்பத்தி மற்றும் விநியோகத்தில், விதைத் தரக்கட்டுப்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதில் தேசிய அளவில் முன்னோடியாக விளங்கி வருகிறது.

இத்துறை, கீழ்கண்டுள்ளவாறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

- ❖ அறிவிக்கை செய்யப்பட்ட பயிர் இரகங்களில், இந்திய குறைந்தபட்ச விதை தரங்களின் (IMSCS) படி சான்றளிப்பு வழங்குதல்.
- ❖ விதைச் சட்டங்களை அமல் படுத்தி, தரமான விதை விநியோகத்தை உறுதி செய்தல்.
- ❖ அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களில், விதைப்பரிசோதனை செய்தல்.
- ❖ விதைத் தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு விதைச் சட்டங்கள் மற்றும் சான்று விதை உற்பத்தி குறித்த பயிற்சி வழங்குதல்.
- ❖ தேசிய அங்கக வேளாண் உற்பத்தித்தரங்கள் (NPOP) இன் படி அங்ககச் சான்றளிப்புத் திட்டத்தை செயல்படுத்துதல்.

நாட்டில் உள்ள மொத்தம் 128 அறிவிக்கை செய்யப்பட்ட விதை பரிசோதனை நிலையங்களில், அதிகபட்சமான 33 அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களைக் கொண்டதன் மூலம் இத்துறை தேசிய அளவில் தனித்துவம் பெற்றதாகிறது. இத்துறையின் கோவை விதைப் பரிசோதனை நிலையம், **சுவிட்சர்லாந்தில்**



**உள்ள பன்னாட்டு விதைக்குழுமத்தின் (ISTA)** அங்கீகாரத்தினை 2014 ஆம் ஆண்டில் பெற்றதன் மூலம் சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தப்பட்டுள்ளது.

### 1. விதைச்சான்றளிப்பு

விதைச்சான்று முகமை, விதைகள் சட்டம் 1966, விதைகள் விதிகள் 1968 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி செயல்பட்டு வருகிறது. இத்துறையின் விதைச் சான்றளிப்புப் பிரிவு, இந்திய குறைந்தபட்ச விதைச்சான்று தரங்களில் (IMSCS) உள்ள முக்கிய காரணிகளை பின்பற்றி உறுதி செய்வதன் மூலம், விதைப்பண்ணைகளில் சான்றளிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. 2014–15 ஆம் ஆண்டில், புதிய சான்றளிப்பு உபகரண பெட்டி, சான்றட்டைகள் பாதுகாப்புப் பெட்டகம், மற்றும் புகைப்படக் கருவிகள் ஆகியன வழங்கப்பட்டு விதைச் சான்றளிப்புப் பிரிவு மேம்படுத்தப்பட்டுள்ளது. 2014–15 ஆம் ஆண்டில் 53,154 ஹெக்டர் விதைப்பண்ணைகள் பதிவு செய்யப்பட்டு, பல்வேறு பயிர்களில், 88,832 மெ.டன் விதைகளுக்கு சான்றளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

2015–16 ஆம் ஆண்டில் 57,000 ஹெக்டர் விதைப்பண்ணைகள் பதிவு செய்திடவும் 1,10,000 மெ.டன் விதைகளுக்கு சான்றளிப்பு வழங்கிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

2014–15 ஆம் ஆண்டில் இத்துறையில் உள்ள துணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்களுக்கு ரூ.57.50 இலட்சம் செலவில் பத்து புதிய ஈப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**2. விதைத் தரக்கட்டுப்பாடு**

மாநிலத்தில் விற்பனை செய்யப்படும் விதைகள், பல்வேறு விதைச் சட்ட விதிகளுக்கு உட்படுவதனை உறுதி செய்வதே விதைத் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவின் முக்கிய பங்கு ஆகும். மாநிலத்தில் விதை விற்பனை மேற்கொள்ள விதை விற்பனையாளர்களுக்கு இத்துறையால் உரிமம் வழங்கப்படுகிறது.

தற்பொழுது மாநிலத்தில் 9,456 உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்கள் உள்ளன. இந்த விதை விற்பனை நிலையங்கள் ஆண்டு ஒன்றுக்கு, குறைந்த பட்சம் ஏழு முறை விதை ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்படுகிறது.

2014–15 ஆம் ஆண்டில் 58,022 விதை மாதிரிகள் குறிப்பிடப்பட்ட தரங்களை கொண்டுள்ளதனை அறிய பரிசோதனைக்கு எடுக்கப்பட்டுள்ளது. 1,334 விதைக் குவியல்களில் 1,501 மெ.டன் அளவு கொண்ட ரூ.8.45 கோடி மதிப்புடைய தரக்குறைவான விதைகளுக்கு விற்பனை தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. சட்ட மீறல்கள் குறித்து 270 நீதி மன்ற வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2015–16 ஆம் ஆண்டில் 68,500 விதை விற்பனை நிலைய ஆய்வுகளை மேற்கொள்ளவும் 66,000 விதை மாதிரிகளை தரப்பரிசோதனைக்காக எடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**3. விதைப் பரிசோதனை**

விதைப் பரிசோதனை நிலையங்கள், விதைத்தரங்களான முளைப்புத் திறன், புறத்தூய்மை, ஈரப்பதம், விதை நலம் மற்றும் பிற ரக கலவன் ஆகியவற்றினை மதிப்பீடு செய்கின்றன. விதைக்



குவியல்களின் இனத்தூய்மை, பயிர் வளர்ப்பு பரிசோதனை பண்ணைகள், கண்ணாடி ஆய்வகங்கள், மற்றும் டி.என்.ஏ மரபணு ஆய்வகங்களில் உறுதி செய்யப்படுகிறது.

இத்துறையில் மொத்தம் 33 அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்கள் உள்ளன. இவற்றில் 29 விதைப் பரிசோதனை நிலையங்கள் மாவட்ட அளவிலும் 4 நிலையங்கள் இயக்ககத்திலும் செயல்பட்டு வருகின்றன. கோவை கண்ணம்பாளையத்தில், அறிவிக்கை செய்யப்பட்ட பயிர் வளர்ப்பு பரிசோதனைப் பண்ணை இயங்கி வருகிறது.

இவ்வியக்ககத்தில் Bt பரிசோதனை (Bt பருத்தியில் உள்ள புரத நஞ்சு) வசதிகளுடன் அமைந்த ஒரு ஒப்பீட்டு ஆய்வகம், ஒரு கண்ணாடி ஆய்வகம் மற்றும் மரபணு (DNA) ஆய்வகம் ஆகிய ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. கோவையில் உள்ள அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையம் 2014 ஆம் ஆண்டில், பன்னாட்டு விதை குழுமத்தின் (ISTA)அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது.

சர்வதேச விதை ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு, பன்னாட்டு விதைக் குழுமத்தின் அங்கீகாரம் பெற்ற பரிசோதனை நிலையத்தின் சான்று பெறுவது அத்தியாவசியமாகிறது. உலக அளவில் 135 ஆய்வகங்கள் பன்னாட்டு விதைக் குழுமத்தின் (ISTA) அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன. நம் நாட்டில் ஆறு ஆய்வகங்கள் மட்டுமே இந்த அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன. இவற்றுள், இத்துறையின் விதை பரிசோதனை நிலையம், கோவை மட்டுமே இந்த அங்கீகாரத்தினை பெற்ற அரசுத்துறை ஆய்வகம் ஆகும்.

2014–15 ஆம் ஆண்டில், இந்த விதைப் பரிசோதனை நிலையங்களில் 95,917 விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. 2015–16 ஆம் ஆண்டில் தொடர்ந்து

விதை மாதிரிகள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**4. பயிற்சி**

இத்துறையின் பயிற்சிப் பிரிவு, விதை உற்பத்தி, விதைச்சான்றளிப்பு மற்றும் விதைச்சட்ட அமுலாக்கத்தில் உள்ள நவீன உத்திகள் குறித்த, திறன் மேம்பாட்டுக்கான பயிற்சிகளை, விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் உழவர்களுக்கு வழங்கி வருகிறது. இத்துறையில் உள்ள அலுவலர்களுக்கு ஆற்றுப்படுத்தும் பயிற்சிகள் மற்றும் புத்தாக்கப் பயிற்சிகள் வழங்கப்படுன்றன. **2014–15** ஆம் நிதி ஆண்டில் **46,614** நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**2015–16** ஆம் ஆண்டில் **47,000** நபர்களுக்கு பயிற்சி வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

**5. அங்ககச் சான்றளிப்பு**

தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறை (TNOCD), அங்கக விவசாயம் (Organic) மேற்கொள்ளும் பண்ணைகளுக்கு சான்றளிப்பு வழங்குகிறது. அங்ககச் சான்றளிப்புத் துறையில் பதிவு செய்யும் பண்ணைகளுக்குத் தேசிய அங்கக வேளாண் உற்பத்தி தர (NPOP) வழிமுறைகளின் அடிப்படையில் ஆய்வுகள் செய்யப்பட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது. அங்கக வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் அங்ககச்சான்று பெற, தனி நபராகவோ, குழுவாகவோ, வணிக நிறுவனங்களாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.

ஆண்டுதோறும், இத்துறையின் மூலம் பதிவு செய்த அங்கக(Organic)விவசாயிகளுக்கு, தேசிய அங்கக



வேளாண் உற்பத்தி திட்டம் மற்றும் தரங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. இது மட்டுமன்றி, **2014–15**ஆம் ஆண்டில், கொச்சியில் நடைபெற்ற சர்வதேச அங்கக வர்த்தகக் கண்காட்சியில் பங்கு பெற அங்கக விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட்டனர். **2014–15** ஆம் ஆண்டில் **29,677** ஏக்கர் பரப்பு அங்ககச்சான்றளிப்பிற்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**2015–16** ஆம் ஆண்டில் **31,000** ஏக்கர் பரப்பினை அங்கக சான்றளிப்பின் கீழ் பதிவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## 6. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம்

### 1. முன்னுரை

விவசாயிகளுக்கு இலாபகரமான விலை கிடைப்பதை உறுதி செய்திட சந்தைகளை உருவாக்குதல்; அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைக் குறைத்திட உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் எனும் இரட்டைக் குறிக்கோள்களுடன் வேளாண்மை விற்பனைத் துறை 1977ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

விவசாயிகள் விளைபொருட்களை விற்பனை செய்திட இத்துறையில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களும், உழவர் சந்தைகளும், சிறப்பு வணிக வளாகங்களும் ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன. அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைக் குறைத்திட, சேமிப்புக் கிடங்குகள், குளிர்பதன கிடங்குகள், பழுக்க வைக்கும் கூடங்கள் மற்றும் உலர்களம் போன்ற வசதிகளையும் இத்துறை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. அறுவடை பின்செய் மேலாண்மை, விளைபொருட்களை பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டுதல், தரம் பிரித்தல் தொடர்பான திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் விவசாயிகளுக்கு இத்துறையின் மூலம் வழங்கப்படுகின்றன. இத்துறை உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை ஏற்படுத்திடவும், சந்தை விலை நிலவரங்களை விவசாயிகளுக்குத் தெரிவித்திடவும் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது.



### 2. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் செயல்பாடுகள்

#### 2.1. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்

தமிழகத்தில் அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில் வேளாண் விளைபொருட்களின் பரிவர்த்தனையை முறைப்படுத்தும் பணியினை தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டம் 1987 மாநில அரசுக்கு வழங்குகிறது. இச்சட்டத்தின் கீழ், 21 விற்பனைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இந்த விற்பனைக்குழுக்கள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் செயல்பாடுகளுக்கு உதவுகின்றன. சந்தைக்கட்டணமாக விளைபொருட்களின் விற்பனை மதிப்பில் ஒரு விழுக்காடு வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. வியாபாரிகள் மற்றும் எடையாளர்களிடமிருந்து உரிமக்கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் வழங்கப்படும் சேவைகளுக்காக விவசாயிகளிடமிருந்து எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. 2014–15 ஆம் ஆண்டில், 23.13 இலட்சம் மெ.டன் விளைபொருட்கள் விவசாயிகளால் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விற்பனை செய்யப்பட்டு, அதன் மூலம் ரூ.104.87 கோடி சந்தைக் கட்டணமாக வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை நியாயமான கட்டணத்தில் சேமித்திட கிடங்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அறுவடைக் காலங்களில் விலை வீழ்ச்சியின்போது வேறுவழியில்லாமல் விவசாயிகள் விற்பனை செய்வதைத்

தவிர்க்க பொருளீட்டுக்கடன் வசதியும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. விளைபொருளின் மதிப்பில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 75 விழுக்காடும், இதர விவசாயிகளுக்கு 50 விழுக்காடும் அதிகபட்சமாக ரூ.2.00 இலட்சம் வரை பொருளீட்டுக்கடன் வழங்கப்படுகிறது. கடன் காலத்தில் முதல் 15 தினங்களுக்கு வட்டி ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. 15 நாட்களுக்கு மேல், 5 சதவீத வட்டி வசூலிக்கப்படுகிறது. 2014–15ஆம் ஆண்டில், 3114 விவசாயிகள் ரூ.43.36 கோடி பொருளீட்டுக்கடன் பெற்று பயனடைந்துள்ளனர்.

அவ்வாறே, பதிவு செய்த வணிகர்களுக்கு, விளைபொருளின் மதிப்பில் 50 விழுக்காட்டுத் தொகை அதிகபட்சமாக ரூ.1.00 இலட்சம் வரை 9 சதவீத வட்டிவீதத்தில் பொருளீட்டுக்கடன் வழங்கப்படுகிறது. 2014–15ஆம் ஆண்டில், ரூ.4.57 கோடி பொருளீட்டுக்கடன் 467 வணிகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மொத்தமுள்ள 277 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 189 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் www.agmarknet.nic.in எனும் இணையதளம் சார்ந்த தேசிய தகவல் வலைதளத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விற்பனை செய்யப்படும் விளைபொருட்களின் விலை விவரம் இந்த இணையதளத்தின் வாயிலாக நிகழ்நிலையாக (online) கிடைக்கிறது. அவ்வாறே 179 உழவர் சந்தைகளும் காய்கறி மற்றும் பழங்களின் தினசரி விலை விவரங்களை www.tnsamb.gov.in என்ற வலைதளத்தின் மூலம் வழங்குகின்றன.



திருச்சியில் உள்ள வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம் பயிர் சார்ந்த ஆலோசனைகளையும், சந்தைத் தகவல்களையும் பதிவு செய்த பயனாளர்களுக்கு குறுஞ்செய்தியாக வழங்கி வருகிறது. 2014–15ஆம் ஆண்டில், சந்தை நுண்ணறிவு ஆலோசனைகள் 22.50 இலட்சம் விவசாயிகளுக்கு எழுத்து மற்றும் குரல்வழிக் குறுஞ்செய்தி வாயிலாக வழங்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் வேளாண் விளைபொருட்களை இடைத்தரகர்களின் குறுக்கீடின்றி பெருநுகர்வோரிடம் நேரடியாக விற்பனை செய்வதற்கு வசதியாக ஊரக வணிக மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சத்தியமங்கலம், கலவை, கிருஷ்ணகிரி, கெங்கவல்லி, ஆர்.பொன்னாபுரம், உளுந்தூர்பேட்டை, பண்ருட்டி, பாவூர்சத்திரம், வத்தலக்குண்டு மற்றும் இராஜபாளையம் ஆகிய 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ஊரக வணிக மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வூரக வணிக மையங்கள் வாயிலாக 2014–15 ஆம் ஆண்டில், 9797.46 மெ.டன் வேளாண் விளைபொருட்கள் 6,770 விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 2.2. வணிக வளாகங்கள்

சிறப்பு வணிக வளாகம், குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம் / பழுக்கவைக்கும் கூடம் மற்றும் வேளாண் ஏற்றுமதி மண்டலங்களும் இத்துறையால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தில் செயல்பட்டு வரும் சிறப்பு வணிக வளாகங்கள் பின்வருமாறு.

| விளை பொருள் | இடம் | உட்கட்டமைப்பு |
|---|---|---|
| மா | கிருஷ்ணகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம் | குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம் |
| தக்காளி | பாலக்கோடு, தர்மபுரி மாவட்டம் | |
| திராட்சை | ஓடைப்பட்டி, தேனி மாவட்டம் | |
| | கம்பம், தேனி மாவட்டம் | |
| வெங்காயம் | பொங்கலூர், திருப்பூர் மாவட்டம் | |
| மலைக்காய்கறிகள் | காரமடை, கோயம்புத்தூர் மாவட்டம் | |
| வெங்காயம் மற்றும் காய்கறிகள் | செட்டிக்குளம், பெரம்பலூர் மாவட்டம் | |
| வாழை மற்றும் காய்கறிகள் | திருச்செந்துறை, திருச்சி மாவட்டம் | |
| தேங்காய் | பொன்னவராயன்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் | வணிக வளாகம் |
| | பெதப்பம்பட்டி, திருப்பூர் மாவட்டம் | |
| நெல் | மாட்டுத்தாவணி – மதுரை, மதுரை மாவட்டம் | |
| காய்கறி மற்றும் பழங்கள் | ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம் | பேரங்காடி |

## 2.3. குளிர்பதன வசதிகள் மற்றும் பழுக்கவைக்கும் கூடங்கள்

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் மிளகாய்க்கென 100 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன வசதிக்கூடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம், மேச்சேரியில்



தக்காளிக்கென 100 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன வசதிக்கூடம் செயல்பட்டு வருகிறது. காய், கனிகளுக்கென திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் (25 மெ.டன்), விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் (15 மெ.டன்) மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூரில் (15 மெ.டன்) குளிர்பதன கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வத்தலக்குண்டு, ஒட்டன்சத்திரம் மற்றும் பழனி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் குளிர்பதன வசதியுடன் கூடிய 3 சேகரிப்பு மையங்களும் கட்டப்பட்டுள்ளன.

அதேபோல், திருச்சி, ஸ்ரீவைகுண்டம், சின்னமனூர் மற்றும் மோகனூர் ஆகிய இடங்களில் வாழை சாகுபடியாளர்கள் பயன்பெறும் வகையில் வாழைத்தார்களை சீராக பழுக்க வைக்க தலா 20 மெ.டன் கொள்ளளவில் பழுக்க வைக்கும் கூடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

## 2.4. உழவர் சந்தைகள்

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களை நேரடியாக நுகர்வோர்களுக்கு விற்பனை செய்வதற்கு வசதியாக, தமிழகத்தில் 179 உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. விற்காத விளைபொருட்களை கட்டணம் ஏதுமின்றி விவசாயிகள் இருப்பு வைத்திட 27 உழவர் சந்தைகளில் தலா 2 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. 2014–15 ஆம் ஆண்டில், சராசரியாக நாளொன்றுக்கு 2659.10 மெ.டன் காய்கறிகள் மற்றும் பழங்கள் உழவர் சந்தைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 2.5. வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள்

வேளாண் விளைபொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில், வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள்

நான்கு இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஏற்றுமதி மண்டலங்களில் குளிர்பதன கிடங்கு, தரம்பிரித்து வகைப்படுத்தும் கூடம், சிப்பம் கட்டும் அறை, பதப்படுத்தும் நிலையம், குளிரூட்டப்பட்ட வாகனங்கள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் கொய்மலர்களுக்கும், நீலகிரி மாவட்டம், ஊட்டியில் மலர்களுக்கும், திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் மாங்கனிக்கும், கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் முந்திரிக்கும் வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 2.6. அக்மார்க் தரம்பிரிப்பு

அக்மார்க் முத்திரை என்பது சிப்பமிடப்பட்ட வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பொருட்களுக்கு வேளாண் விளைபொருட்கள் (தரம்பிரித்தல் மற்றும் குறியிடுதல்) சட்டம் 1937–இன்படி (1986–இல் திருத்தியமைக்கப்பட்டது) வகுக்கப்பட்ட தரநிர்ணயங்களின் அடிப்படையில் அளிக்கப்படும் ஒரு தரச்சான்று ஆகும். தமிழ்நாட்டில் 30 தரம்பிரிப்பு ஆய்வகங்களும் ஒரு முதன்மை ஆய்வகமும் இயங்கி வருகின்றன. 2014–15ஆம் ஆண்டில், அக்மார்க் தரம்பிரிப்பு ஆய்வகங்கள் மூலம் 17.93 இலட்சம் குவிண்டால் உணவு பொருட்கள் தரம்பிரிப்பு செய்யப்பட்டுள்ளன.

## 3. துறையினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 3.1. ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டம்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் சேமிப்புக் கிடங்குகள் மற்றும் குளிர்பதன வசதிகள் நபார்டு வங்கியின்



ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி கடனுதவியில் (95 சதவீதம்) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 5 சதவீதத் தொகையினை விற்பனைக்குழு வழங்குகிறது. 2011–12 ஆம் ஆண்டிலிருந்து 2.40 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 88 நவீன சேமிப்புக் கிடங்குகளும், மொத்தம் 1750 மெ.டன் கொள்ளளவு கொண்ட 70 குளிர்பதன கிடங்குகளும் மொத்தம் ரூ.150.56 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

மேலும், காரமடை, அன்னூர், தொண்டாமுத்தூர், கிணத்துக்கடவு மற்றும் பொள்ளாச்சி ஆகிய 5 இடங்களில் சேகரிப்பு மையங்களை உருவாக்கி கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள வணிக வளாகத்துடனும், நத்தம், ஒட்டன்சத்திரம், பழனி, திண்டுக்கல் மற்றும் வத்தலக்குண்டு ஆகிய 5 இடங்களில் சேகரிப்பு மையங்களை உருவாக்கி திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள வணிக வளாகத்துடனும் மொத்தம் ரூ.3.60 கோடி மதிப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

மின்னணு ஏலமுறை வசதிகள் மஞ்சளுக்காக ஈரோடு மாவட்டம் அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும், மக்காச்சோளத்திற்காக திண்டுக்கல் மாவட்டம் பழனி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திலும் ரூ.1.18 கோடி மொத்த மதிப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நபார்டு வங்கியின் கடனுதவி மூலம் கீழ்க்கண்ட உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றன.

- அம்பாசமுத்திரத்தில் ரூ.1.30 கோடி மதிப்பில் வாழைக்கென சிறப்பு வணிக வளாகம்.
- திருச்சி மாவட்டம், கள்ளிக்குடியில் ரூ.77.06 கோடி மதிப்பில் காய்கறிகள், பழங்கள் மற்றும் மலர்களுக்கான

மத்திய காய்கறி சந்தை. இத்திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு, கட்டுமானப் பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளது.

### 3.2. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் சந்தை உட்கட்டமைப்புகளை மேம்படுத்திடவும், பழுக்க வைக்கும் கூடங்கள், குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகங்கள், வணிகர் கடைகள் மற்றும் பரிவர்த்தனைக்கூடங்கள் உள்ளிட்ட அறுவடை பின்செய் மேலாண்மைக்கான உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

2014–15ஆம் ஆண்டில், இராமநாதபுரம் மாவட்டத்தில் மிளகாய்க்கென குளிர்பதன கிடங்குடன் கூடிய ஒருங்கிணைந்த வணிக வளாகம், சேலம் மாவட்டம், வாழப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் 25 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்கு, கன்னியாகுமரி மாவட்டம், தேரூர் மற்றும் திங்கள் சந்தையில் நெல்லுக்கு முறையே 500 மெ.டன் மற்றும் 1000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள், கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் நறுமணப் பொருட்களுக்கென வணிக வளாகம், தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறில் வாழை பழுக்க வைக்கும் கூடம், ஏழு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் பரிவர்த்தனைக் கூடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

2015–16ஆம் ஆண்டில் மக்காச்சோளம், மா, தேங்காய், அங்கக தானியங்கள் மற்றும் சிறுதானியங்களுக்கு உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.



## 4. தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு

தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு, மத்திய சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பின் சங்கமாக செயல்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பானது சந்தைத் தொடர்புகளை வலுப்படுத்த விவசாயிகளுக்கு உதவுகிறது. தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு தமிழகத்தில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை செயல்படுத்தும் முகமை நிறுவனமாகவும் செயல்படுகிறது.

இவ்வமைப்புகளுக்கு அளிக்கப்படும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளினால் விவசாயிகள் தாங்களாகவே வணிகப்பயிர் சாகுபடியினை மேற்கொள்ள முடிகிறது. இதனால் தேவைப்படும் இடுபொருட்களையும், விளைபொருட்களையும் விற்பனை செய்யும் கடைகளை சங்க உறுப்பினர்கள் செயல்படுத்த முடியும். மேலும், சிறு விவசாயிகளின் வேளாண் உற்பத்தியை சேகரித்து இலாபகரமான விலை கிடைக்கும் வகையில் திறம்பட விற்பனை செய்ய ஏதுவாகிறது. தமிழகத்தில் கீழ்க்கண்ட உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

| வருடம் | உழவர் உற்பத்தியாளர் அமைப்புக்கான விளைபொருள் | மாவட்டம் |
|---|---|---|
| 2014–15 | சிறுதானியங்கள் | தர்மபுரி, விருதுநகர், திருவண்ணாமலை, கடலூர் |
| | காய்கறிகள் | கோயம்புத்தூர் |
| | மா | கிருஷ்ணகிரி |
| | கொய்யா | திண்டுக்கல் |
| | வாழை | திருச்சி |
| | மிளகாய் | இராமநாதபுரம் |
| | பயறுவகைகள் | தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், சேலம், மதுரை, புதுக்கோட்டை, விழுப்புரம் |
| | பயறுவகைகள் மற்றும் சிறு தானியங்கள் | விழுப்புரம் |

சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் தொழில் மூலதன முதலீட்டுத் திட்டத்தில் சிறு விவசாயிகளிடம் கொள்முதல் இணைப்பு ஏற்படுத்தும் வேளாண் வணிகத் திட்டங்கள் அமைக்க வேளாண் சார்ந்த தொழில் முனைவோர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இத்திட்டத்தின் கீழ், தொழில் தொடங்கத் தேவையான மூலதன முதலீட்டுத் தொகையில், வணிக நிறுவன முதலீட்டாளரின் நிதிப் பங்களிப்பில் 26 விழுக்காடு அல்லது ரூ.50.00 இலட்சம் இதில் எது குறைவோ அது வட்டியில்லாக் கடனாக மத்திய அரசால் வழங்கப்படுகிறது. பதிவுசெய்யப்பட்ட உழவர் உற்பத்தியாளர்



அமைப்புகளுக்கு, மூலதன முதலீட்டுத் தொகையாக அவ்வமைப்பின் நிதி பங்களிப்பில் 40 விழுக்காடு அல்லது ரூ.50.00 இலட்சம் இதில் எது குறைவோ அது வட்டியில்லாக் கடனாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், மாம்பழக்கூழ் தயாரித்தல், மலர் சாகுபடி (பாலித்தீன் குடில்), மென்தால் (புதினா), தேங்காய், குளிர்பதன வசதி, காளான் வளர்ப்பு, மூலிகைப் பயிர்கள், கெர்கின் பதப்படுத்துதல், பழுக்க வைக்கும் கூடம், சோற்றுக் கற்றாழையின் மூலம் கிடைக்கும் ஜெல் மற்றும் இதரப் பொருட்கள், பலவகையான பழங்கள் மற்றும் காய்கறிகள், புற்றுநோய் தடுப்பு மருந்து, தேயிலை, தேங்காய் ஓட்டுக்கரி மற்றும் உணவு பதனிடும் மையம் ஆகிய திட்டங்களுக்காக இதுவரை 69 வேளாண் வணிக நிறுவனங்களுக்குத் தொழில் தொடங்குவதற்கான மூலதன முதலீட்டுத் தொகையாக ரூ.23.13 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**5.தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்**

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் 1970 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. விற்பனைக்குழுக்களின் மொத்த வருவாயில் 15 விழுக்காடு பங்குத் தொகை விற்பனை வாரியத்திற்கு செலுத்தப்படுகிறது. இவ்வாறாகப் பெறப்படும் மொத்தத் தொகையில், 50 விழுக்காடு சந்தை மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள சந்தை மேம்பாட்டு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

## 5.1. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய செயல்பாடுகள்

### 5.1.1. திறன் மேம்பாட்டு பயிற்சி

விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் அறுவடை பின்செய் நேர்த்தி மற்றும் விஞ்ஞானமுறை சேமிப்பு குறித்த பயிற்சி ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகங்களில் அளிக்கப்பட்டு வருகின்றது. இப்பயிற்சிகளின் மூலம் 2014–15 ஆம் ஆண்டில் 2,640 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை பணியாளர்கள் மற்றும் விவசாயிகளின் திறன் மேம்பாட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், சேலத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய பயிற்சி மையம் பயிற்சிகளை அளித்து வருகிறது. இம்மையத்தில் வழங்கப்பட்ட பயிற்சிகளின் மூலம் 2014–15 ஆம் ஆண்டில் 431 தொழில்நுட்ப பணியாளர்களும், 194 விவசாயிகளும் பயனடைந்துள்ளனர்.

2015–16 ஆம் ஆண்டில் தொடர்ந்து பயிற்சிகள் வழங்கப்படும்.

### 5.1.2. தமிழ்நாடு உழவர் மேம்பாடு மற்றும் நலத் திட்டம்

விவசாயிகளை பல்வேறு இடர்பாடுகளிலிருந்து பாதுகாத்திட 02.11.1995 முதல் இத்திட்டத்தினை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் மூலமாக ஆண்டொன்றுக்கு ஒரு மெட்ரிக் டன்னுக்கு மேல் வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்யும் 18 முதல் 60 வயதுக்குட்பட்ட விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்கள் இத்திட்டத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்படுகின்றனர்.



இதற்கு உறுப்பினர்கள் சந்தாத் தொகை ஏதும் செலுத்தத் தேவையில்லை. அத்தொகையை விற்பனைக்குழுவும், விற்பனை வாரியமும் சமபங்காக செலுத்துகின்றன.

இத்திட்டத்தின் கீழ், விபத்து அல்லது பாம்புக்கடியினால் உறுப்பினர் மரணமடைந்தாலோ, நிரந்தர உடல் ஊனமுற்றாலோ உதவித் தொகையாக ரூ.1,00,000/– வழங்கப்படுகிறது. இரண்டு கைகளையோ, கால்களையோ அல்லது கண்களையோ இழக்க நேரிட்டால், உதவித் தொகையாக ரூ.75,000/– வழங்கப்படுகிறது. ஒரு கை அல்லது கால் அல்லது கண்ணை இழக்க நேரிட்டாலோ அல்லது நிரந்தரமாக இடுப்பு ஊனமுற்றாலோ உதவித் தொகையாக ரூ.50,000/– வழங்கப்படுகிறது.

### 5.1.3. கட்டுமானப்பிரிவு

சேமிப்புக் கிடங்குகள், பரிவர்த்தனைக் கூடங்கள், வணிக வளாகங்கள், குளிர்பதன கிடங்குகள், உலர்களங்கள் போன்ற வேளாண்மை சந்தை உட்கட்டமைப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் விற்பனை வாரியத்தின் பொறியியல் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 7. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

**முன்னுரை**

நீர்ஆதாரங்களை பாதுகாத்து, நீர் பயன்பாட்டுத் திறனை ஊக்குவித்து பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்தோடு தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை 2002 ல் நிறுவப்பட்டது.

கீழ்கண்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் இம்முகமையின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

- ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம்
- நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி
- மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

மேலும், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட திட்டங்களுக்கான நிதியை வழிப்படுத்தி கொண்டு செல்வதற்கான இணைப்பு முகமையாக செயல்படுகிறது.

- தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்
- நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்
- தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம்
- மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணைக்கான விரிவாக்க சீரமைப்புத் திட்டம்
- வேளாண் தகவல் சேவை வலைதளம் ‘



### 1. பிரதம மந்திரி விவசாய நீர்பாசனத் திட்டம் (PMKSY)

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத்திட்டம் (IWMP) தற்பொழுது மத்திய அரசின் புதிய திட்டமான **பிரதம மந்திரியின் விவசாய நீர் பாசனத் திட்டத்தின் (PMKSY)** கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்ட இனங்கள் (IWMP) நிலம் மற்றும் நீர் ஆதாரங்களை உகந்த அளவில் பயன்படுத்தி விவசாயிகளை அதிக அளவில் பயனடைய செய்யும் குறிக்கோளோடு நீர்வடிப்பகுதியின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

முந்தைய ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத்திட்டம் 26 மாவட்டங்களில் உள்ள 2763 நீர்வடிப்பகுதிகளில் கடந்த 6 ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான செலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் முறையே 90:10 என்ற விகித அளவில் பகிர்ந்து கொள்கின்றன.

முந்தைய ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத்திட்டம் கீழ் பின்வரும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| செயல்பாடு | மேற்கொள்ளப்படும் பணிகள் |
|---|---|
| நிலமேம்பாடு | நிலம் சமன்படுத்துதல், சம உயர வரப்பு அமைத்தல், கல்வரப்பு அமைத்தல், தடுப்புச்சுவர் அமைத்தல், கோடை உழவு, தாவர வரப்பு அமைத்தல் மற்றும் தொடர் குழி அமைத்தல் |

| செயல்பாடு | மேற்கொள்ளப்படும் பணிகள் |
|---|---|
| நீர்வள மேம்பாடு | புதிய குளங்கள் / ஊருணிகள், பண்ணைக்குட்டை அமைத்தல், கசிவு நீர்க்குட்டை அமைத்தல், குளங்கள் மற்றும் நீர்வரத்துக் கால்வாய்களை தூர்வாருதல் |
| தாவர நடவுப்பணி | பழமரக் கன்றுகள் நடுதல், சமூக வேளாண் காடுகள் அமைத்தல், தீவனப்பயிர் மேம்பாடு, பயிர் செயல் விளக்கம் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல் |
| பொதுக் கட்டமைப்பு மேம்பாடு | தடுப்பணைகள் கட்டுதல், கால்நடைக் குட்டைகள் அமைத்தல், வரத்துக் கால்வாய் அமைத்தல், ஊருணி தூர் வாருதல், ஏரி மற்றும் குளம் தூர்வாருதல் |
| பண்ணை உற்பத்தி திட்டம் மற்றும் குறுந்தொழில்கள் | பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத தொழில்கள் துவங்க அதிகபட்சமாக ரூ.24000/–விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. |
| சுய உதவிக்குழு மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கான வாழ்வாதாரப்பணிகள் | நீர்வடிப்பகுதியில் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டியில்லாத சுழல் நிதியும் நிலமற்ற விவசாயிகள் மற்றும் பயனாளிகள் குழுக்களுக்கு மானியமும் வழங்கப்படுகிறது. |

**2014–15** ஆம் ஆண்டில் **19** மாவட்டங்களில் **1.596** இலட்சம் எக்டர் பரப்பில் நீர்வடிப்பகுதித் திட்டங்களை ரூ.**191.62** கோடி செலவில் **5** ஆண்டுகளில் செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதுவரை ரூ.**166.17** கோடி நிதி மத்திய அரசாலும், ரூ.**31.39** கோடி நிதி மாநில அரசின் பங்காகவும் விடுவிக்கப்பட்டுள்ளது.



**2015–16** ஆம் ஆண்டில் இத்திட்டம் பிரதம மந்திரி விவசாய நீர் பாசனத் திட்டம் என்ற பெயரில் செயல்படுத்தப்படும்.

**2. நபார்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டம் :**

நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் இந்த நீர்வடிப்பகுதி திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தற்போது **12** நீர்வடிப்பகுதிகளுக்கு முழுமானியத்திலும், மற்ற **142** நீர்வடிப்பகுதிகளுக்கு கடன் அடிப்படையிலும் செயல்படுத்தப்படுகிறது. இந்த **142** நீர்வடிப்பகுதிகளில், **56** நீர்வடிப்பகுதிகளில் பணிகள் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தில் நிலப்பண்படுத்துதல் பகுதியின் கீழ் பண்ணைக்குட்டை, வயல் வரப்பு அமைத்தல், வடிகால் அமைப்புகளை சரிசெய்தல், அமிழ்வு நீர்க்குட்டை அமைத்தல், வேளாண்காடு மற்றும் தோட்டக் கலை ஆகிய பணிகளுடன் பாரம்பரிய மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை புதுப்பித்தல் ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன. பெண்கள் மற்றும் நிலமற்ற விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்காக, மளிகை கடை கட்டுவதற்கும், சிறிய மாவு ஆலை அமைக்கவும், பூக்கள் விற்கவும், பலசரக்கு கடை அமைக்கவும் முக்கியத்துவம் தரப்படுகிறது.

**3. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் :**

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், நீர்வடிப்பகுதி அணுகுமுறையில், **2009–2010** ஆம் ஆண்டு முதல் திண்டுக்கல், மதுரை, தேனி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. **2012–2013** ஆம் ஆண்டு முதல் விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கும், **2013–14** ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும்

கன்னியாகுமரி மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தப் பட்டுள்ளது.

மாநில அளவில் இத்திட்டத்திற்கான நிதி, மாநில திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் மூலமாக பெறப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. மாவட்ட அளவில் ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2014–15** ஆம் ஆண்டில் ரூ. **22.84** கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம், சுற்றுச்சூழல் மற்றும் வன , வேளாண்மைப் பொறியியல், வேளாண்மை, தோட்டக்கலை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், கால்நடைப் பராமரிப்பு, ஊரக வளர்ச்சி மேம்பாட்டு முகமை, மீன் வளம், சுற்றுலா, நகரப் பஞ்சாயத்து மற்றும் கதர் கிராமத் தொழில் ஆகிய சார்பு துறைகள் மூலமாக கிராம மக்களின் பங்கேற்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மாநில அளவிலான புள்ளியியல் தகவல் மையம்**

(State Level Data Centre)

நீர்வடிப்பகுதிகளை அறிவியல் பூர்வமாக திட்டமிடவும் திறமையாக நிர்வகிக்கவும், மாநில அளவிலான புள்ளியியல் தகவல் மையம், புவித்தகவல் தொழில் நுட்ப அமைப்புடன் (GIS) அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து நீர்வடிப் பகுதி பணிகளையும் புவித்தகவல் தொழில்நுட்ப அமைப்பின் மூலம் கண்காணிக்கப்படுவதால் நீர்வடிப்பகுதிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட திட்டங்கள் இணையாமல் தவிர்க்கப்படுகிறது.

இந்த புள்ளியியல் தகவல் மையத்தில், இதுவரை **2763** நீர்வடிப்பகுதிகளை உள்ளடக்கிய **13.69** இலட்சம் எக்டர் பரப்பு



முழுமையாக மின்னணுமயமாக்கப்பட்டுள்ளது. புவித்தகவல் தொழில் நுட்ப அமைப்பின் மூலம் நிலஅளவு வரைபடங்கள் (Cadastral Maps) நீர்வடிப்பகுதியின் வரையறைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. நீர்வடிப்பகுதிகளில் மேற்கொள்ளப்படுகிற அனைத்து மேம்பாட்டு பணிகளும் புவித்தகவல் தொழில் நுட்ப அமைப்பின் மூலம் குறியீடு செய்யப்பட்டு ஏற்கனவே உள்ள புவியின் செயற்கைக்கோள் படங்கள் (satellite imagery) மூலமாக ஒப்பிட்டு சரிபார்க்கப்படுகிறது. இவ்விவரங்கள் அனைத்தும் www.bhuvan.nrsc.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றப்படுகின்றன.

**ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டத்தின் கீழ் சிறந்த செயலாக்கத்திற்கான புதுமை விருது**

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டத்தின் கீழ் இணையான மேலாண் தகவல் அமைப்பினை ஏற்படுத்தி, சிறந்த முறையில் திட்டப் பணிகளை பதிவு செய்தமைக்காக தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைக்கு **சிறந்த செயலாக்கத்திற்கான புதுமை விருது** **19.02.2015** அன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

## கோரிக்கை எண். 5 வேளாண்மைத் துறை
## 2015–2016–ல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

## 2015–2016 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு
(ரூபாய் ஆயிரத்தில்)

| | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை அனுமதித்தது | 6,141,99,55 | 321,18,40 | 150,50,00 | 6,613,67,95 |
| மொத்த தொகை சாட்டியது | 3 | ... | ... | 3 |

நிகரச் செலவு (ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்பு | | 2013–14 கணக்குகள் | 2014–15 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2014–15 திருத்த மதிப்பீடு | 2015–16 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2059 | பொதுப் பணிகள் | 2,38,01 | 2,62,00 | 2,58,00 | 2,58.00 |
| 2401 | பயிர் வளர்ப்பு | 4,335,17,71 | 4,448,33,00 | 4,788,55,76 | 5,476,30,61 |
| 2402 | மண்வள, நீர் வளப் பாதுகாப்பு | 89,11,50 | 84,24,00 | 127,98,59 | 88,30,41 |
| 2408 | உணவு சேமிப்பு – கிடங்கு வசதி | 10,40,50 | 16,44,01 | 10,69,33 | 16,44,00 |
| 2415 | வேளாண்மை ஆராய்ச்சியும் கல்வியும் | 285,40,51 | 287,02,89 | 300,75,55 | 303,96,79 |
| 2435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் | 114,30,82 | 112,48,99 | 126,61,50 | 124,66,42 |
| 2501 | ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் | 21,48,79 | 48,00,01 | 191,32,18 | 73,74,50 |
| 2551 | மலைப் பகுதிகள் | 3,06,72 | 3,15,67 | 3,76,87 | 79,22 |
| 2702 | சிறுபாசனம் | 8,22,53 | 9,26,71 | 9,50,45 | 9,67,77 |
| 2705 | பாசனப் பகுதி மேம்பாடு | 18,54,43 | 22,59,99 | 18,74,84 | 14,02,54 |
| 2810 | புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி | 63 | 27,48,60 | 27,22,25 | 10,53,60 |
| 2852 | தொழில்கள் | 25 | ... | ... | ... |
| 3451 | தலைமைச் செயலகம் – பொருளாதாரப் பணிகள் | 8,62,14 | 9,74,88 | 9,11,24 | 8,90,57 |



நிகரச் செலவு (ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்பு | | 2013–14 கணக்குகள் | 2014–15 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2014–15 திருத்த மதிப்பீடு | 2015–16 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 4401 | பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | 28,57,68 | 1,82,09 | 8,14,09 | 154,55,61 |
| 4402 | மண்வள நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு | 51,13,38 | 3,14,28 | 40,62,49 | 33,41,07 |
| 4435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 36,26,47 | 100,00,07 | 117,50,88 | 100,00,04 |
| 4551 | மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 5,91,66 | 6,50,01 | 6,44,00 | 6,50,01 |
| 4705 | பாசனப் பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு | 31,99,76 | 26,22,02 | 27,55,74 | 26,40,17 |
| 6401 | பயிர் வளர்ப்புக்கான கடன்கள் | 149,44,00 | 150,00,00 | 150,00,00 | 150,00,00 |
| 7610 | அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | ... | 50,00 | 50,00 | 50,00 |

**கோரிக்கை எண் 5 வேளாண்மைத் துறை**
**2015–2016 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு**
**ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)**

| துறைத் தலைவர் | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 05 01 | தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 8,90,57 | ... | 50,00 | 9,40,57 |
| 05 02 | வேளாண்மை இயக்ககம் | சாட்டியது | 1 | ... | ... | 1 |
| | | அனுமதித்தது | 4,964,11,35 | 176,61,52 | 150,00,00 | 5,290,72,87 |
| 05 03 | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்ககம் | அனுமதித்தது | 96,41,13 | 100,00,04 | ... | 196,41,17 |
| 05 04 | விதைச் சான்று இயக்ககம் | அனுமதித்தது | 39,35,07 | ... | ... | 39,35,07 |
| 05 05 | தோட்டக்கலை, மலைத் தோட்டப் பயிர்கள் இயக்ககம் | சாட்டியது | 1 | ... | ... | 1 |
| | | அனுமதித்தது | 434,66,66 | 55,14 | ... | 435,21,80 |
| 05 06 | வேளாண்மைப் பொறியியல் துறை | சாட்டியது | 1 | ... | ... | 1 |
| | | அனுமதித்தது | 289,02,00 | 44,01,70 | ... | 333,03,70 |
| 05 07 | வேளாண் பொறியியல் பணிகள் | அனுமதித்தது | 44,93 | ... | ... | 44,93 |
| 05 08 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் | அனுமதித்தது | 308,45,03 | ... | ... | 308,45,03 |
| 05 09 | அங்கக சான்றளிப்பு இயக்ககம் | அனுமதித்தது | 62,81 | ... | ... | 62,81 |
| | **மொத்தம்** | சாட்டியது | 3 | ... | ... | 3 |
| | | அனுமதித்தது | 6,141,99,55 | 321,18,40 | 150,50,00 | 6,613,67,95 |

**ஆர். வைத்திலிங்கம்**
**வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும்**
**வேளாண்மைத்துறை அமைச்சர்**